



# சந்தி குறியீட்டு விளக்கம்

# சந்தி குறியீட்டு விளக்கம்



பதிப்பாசிரியக் குழுவினரால்
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
**எஸ். ராஜம்**
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

## நூன்முகம்

சந்தி முறை தமிழ்மொழியின் ஒரு தனி இயல்பு. இது ஓசை அமைதியின் அடிப்படையில் அமைந்தாலும், பொருளையும் நிலைக்கள மாகக் கொண்டது; பொருளுக்காகவும் சந்தி மாறுதல்கள் நேருகின்றன.

எனினும், திரிபு சந்திகள் எளிதில் விள்ளமுடியாத புதிர் போல, கற்றவர்களையே திகைக்கச் செய்பவை. இதனால், நாளடைவில் சந்திகளை நெகிழ்த்து எழுதுதலைப் புலவர் பெருமக்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். இத்தகையோரின் வழிமுறையைப் பின்பற்றியே பாடல்களைச் சந்தி பிரித்தலில் ஒரு நியதியை மேற்கொண்டுள்ளோம். இவை எல்லாம் மாறுதல் செய்யக்கூடாதவை அல்ல; இவை மேலும் நெகிழ்ந்து சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. காலப்போக்கு அவ்வாறு உள்ளது. நிறுத்தற் குறியீடுகள் நமக்குப் புதியவை. இந்த இரண்டு துறைகளிலும் தமிழ் இலக்கியச் செல்வப் பதிப்புக்களில் (மர்ரே அண்டு கம்பெனி) மேற்கொண்ட முறைகளை இந் நூலில் தந்துள்ளோம்.

இவற்றில் மேலும் மாறுதல்களோ, சேர்வுகளோ, திருத்தங்களோ, அவசியம் என அறிஞர்கள் கருதுவாராயின், அவற்றைப் பதிப்பாசிரியர் குழுவினருக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம். அறிஞர்கள் தரும் கருத்துக் கள் நன்றியுடன் ஏற்றுக் குழுவினரால் கொள்ளத் தக்கனவேல், பிற் பதிப்புக்களில் மேற்கொள்ளப் பெறும்.

# சந்தி பிரிப்பு

சமீப காலம் வரை நம் தமிழ் இலக்கியங்கள் எல்லாமே செய்யுள் வடிவில்தான் மிகுதியும் அமைக்கப்பட்டு வந்தன. கல்வி அறிவும் படிக்கும் பழக்கமும் மிகுந்துவரும் இக்காலத்தில் கூட இந் நூல்கள் மக்களிடையே போதிய அளவு பரவவில்லை. ஏனென்றால், இந்த இலக்கியச் செல்வங்களின் பொருளை உணர்ந்து பயனடையவும், இவற்றின் அழகை அனுபவிக்கவும் எல்லாருக்கும் எளிதில் இயலுவதில்லை. அதற்கு இலக்கணப் பயிற்சி மிகுதியும் வேண்டும். ஓரளவு தமிழ் பயின்றவர்களாலும், தக்க உதவி இருந்தால் அன்றி, இந்த இலக்கியங்களின் நயத்தை நுகர முடிவதில்லை. விரைவையும் எளிமையையும் நாடும் இக்காலத்தில் படிப்போர் மூலத்தின் பொருளைப் பிறர் உதவியின்றித் தாமே உணரவும், அதன் நயத்தை அனுபவிக்கவும் ஏற்ற வகையில் நூல்களைப் பதிப்பிக்கும் அவசியம் நேர்ந்துள்ளது.

இக்காலத்து அச்சு நூல்களில் செய்யுட்கள் அடி முதலிய வரையறைகளுடன் பதிப்பிக்கப் பெறுவதைப் பார்க்கிறோம். அச்சிட்டுள்ள முறையிலிருந்தே ஒரு செய்யுள் இன்ன பாடல் வகையைச் சார்ந்தது என்று எளிதாகக் கண்டுணர முடிகிறது. ஆனால், தமிழ் நூல்கள் முதலில் அச்சிடப்பட்டபோது இவ்வாறு அமைந்திருக்கவில்லை. அடிவரையறையின்றி ஒரே சங்கிலித்தொடராக ஏடுகளில் எழுதப்பட்டிருப்பதுபோலவே அச்சிலும் முதலில் வெளியிட்டார்கள். பின்னர், எதுகை நோக்கி அடிகளை உணர்ந்துகொள்வதற்கு உதவியாகச் சிலர் உடுக்குறி இட்டும், சிலர் சிறுகோடு இட்டும் பதிப்பித்தார்கள். இதன் பின்னர், அடிகளை ஒன்றன் கீழ் ஒன்றாக அமைத்துப் பதிப்பித்தார்கள். பின்னர், இவ் அடிகளும் நீண்ட சொற்கோவைகளாய் இருந்தமையால், அடிகளின் தொடக்கத்தில் மட்டும் சந்தி பிரித்தலை மேற்கொண்டனர். இதனால் மோனை எழுத்துக்களின் வடிவம் புலனாயிற்று. மேலும், செய்யுளின்

இயல்பை உணர்ந்து எளிதில் படிக்கத் துணைபுரிய, சீர்களாகப் பிரித்து இடைவெளி விட்டுப் பதிப்பிக்கலாயினர். இத்தகைய சீர் பிரித்தலினல் செய்யுளின் ஓசையின்பம் உணர்தற்கு எளிதாயிற்று. செய்யுளிலுள்ள பிழைகளை உணர்ந்து திருத்தமாகப் படித்தற்கும் சீர் முறை பயனுயிற்று. ஆனல், சீர்ப் பிரிவினையினல் சில சொல் வடிவங்கள் பிளவுபட்டன. சந்தி இணைப்பினலும், செய்யுள் அமைப்பு, ஓசை இன்பம், பொருள் நோக்கம், எதுகை மோனை போன்ற தொடை விகற்பங்கள் முதலிய வற்ருலும், சொற்களின் வடிவங்களில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ன, ல; ண, ள, ஆகியவை சந்தியில் ஒரே வகையான மாறுதல்களைப் பெறுவதால் சொற்களின் உண்மையான வடிவு எது என்று துணிதல் எளிதன்று. இத்தகைய மாறுபாடுகளினல், செய்யுட்களைச் சரிவரப் படிப்பதிலும், பதங்களின் உண்மை வடிவத்தைத் தெரிந்து பொருள் கொள்வதிலும், பல இடர்ப்பாடுகள் உள்ளன.

சந்தி முதலியவற்ருல் சொற்களின் உண்மை வடிவம் தெரியாமல் போகவே, பாடல்களிலுள்ள சொற்களைத் தனித் தனியே உணரப் பதவுரையை நாடவேண்டியிருந்தது. பதவுரையால் மட்டுமே பாடலின் உட்பொருளைத் தெளிவுபடுத்த இயலாது. அதன்பொருட்டு விளக்க உரைகளும் கருத்துரைகளும் தோன்றின. சில சொற்களின் திரிபுநிலை முதலியன பற்றி இலக்கணக் குறிப்புக்களும் எழுதுதல் இன்றியமையாத தாயிற்று. இங்ஙனம் வரவர உரைப்பகுதிகள் மிகுந்து செல்லவே, நூலின் அளவும் விலையும் அதிகமாகி, படிப்போரைத் தடுமாறச் செய்தன. மேலும், படிப்போர் நூல் நயத்தைத் தாமே உணர்ந்து அனுபவிப்பதற் கும் இவற்ருல் ஓரளவு இடையூறு உண்டாயிற்று. இது கருதியே பண்டை உரையாசிரியர்கள் தமது உரையை அரும்பத உரையாகவும் பொழிப்புரையாகவும் அமைத்தனர் என்று தோன்றுகிறது.

ஆகவே இலக்கிய மூலத்தை எல்லாரும் எளிதில் பெற்றுப் படித்துப் பயனடையத் தக்கபடி பாடல்களில் சந்திகளை நீக்கி, சொல் வடிவம் புலப்பட அச்சிடுதல் அவசியமாகிறது. உரை வகுக்கும் முறையில் முதற்படியாக உரைகாரர்கள் எடுத்துக் காட்டுவது கண்ணழித்தல். கண்ணழித்தலாவது பதம் பதமாகப் பிரித்துப் பொருள் உரைத்தலாகும். எனவே, பதங்களின் வடிவங்கள் விளங்குமாறு கண்ணழித்துப் பதிப் பித்தல் ஒன்றே ஏனைய நயங்களைப் பாடல்களில் கண்டுகொள்ளுதற்குத் துணைபுரிவதாகும். செய்யுட்களைக் கற்போரும் பொருள் விளங்கும் வகையில் பதம் பிரித்தே முதற்கண் பயிலுகின்றனர். இத்தகைய முறையில் பதிப்பிக்கப்பெற்ற செய்யுட்களை ஓரிரு முறை படித்தாலே அநேகமாகப் பாடலின் கருத்து விளங்கிவிடும்.

தேவாரத் திருப்பாட்டுக்களும் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களும் பண்டு பண்ணேடு பாடப்பெற்று வந்தன. முன் நாளில் பாடிவந்த

பண்ணுப் பெயர்களும் சுவடிகளின் வாயிலாகத் தெரியவருகின்றன. ஆயினும், பிற்காலத்தில் அம் முறை வழக்கொழிந்து போயிற்று. கர்நாடக சங்கீத இராகங்களிலேயே இப்பொழுது பாடிவருகின்றனர். தேவாரப் பாடல்களை இக்காலத்தில் ஓதிவருகின்ற முறை கீழ்வேளூர்ச் சொக்கலிங்க தேசிகர் கற்பித்துவந்த வழியைப் பின்பற்றியதாகும். தேசிகர் ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் கீர்த்தனங்களைப் பின்பற்றி ஒருவகையான ஓதும் முறையைப் பலருக்கும் கற்பித்துவந்தனர். இச் செய்தி மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் எழுதிய ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர் வரலாற்றிலிருந்து விளங்குகிறது. டாக்டர் ஐயர் அவர்கள் கூறுவதாவது:

'தேவாரப் பண்கள் ரக்தி ராகத்தில் அமைந்துள்ளன. ஆதலால் அந்த ராக பாவங்களை அறிவதற்குத் தீக்ஷிதருடைய (ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர்) கீர்த்தனங்களைக் கீழ்வேளூர் வாசியான சொக்கலிங்க தேசிகர் என்பவர் கற்றனர். பிறகு ராக பாவங்கள் புலப்படும்படி தேவாரங் களைப் பாடிப் பல பாடசாலைகள் அமைத்துக் கற்பித்துவந்தனர். தேவாரகோஷ்டிகள் இப்பொழுது பாடிவரும் சம்பிரதாயங்கள் எல்லாம் அவர் கற்பித்தனவே.' (நல்லுரைக் கோவை II, பக். 121)

இவற்ருல் பண்முறையில் பாடும் பரம்பரை பல ஆண்டுகளுக்கு முன்பே அற்றுப்போய்விட்டமை புலனும்.

தேவாரம், திவ்யப் பிரபந்தம் முதலிய இயல் இசைப் பாடல்களைப் பாடுவார்க்குச் சந்தி பிரித்தல் தடையாம் எனக் கருதுவாரும் உண்டு. இங்ஙனம் பாடுவார்க்குச் சீர்பிரித்தல் கூடப் பெருந் தடையே. ஏனெனில், ஒரு பாடலைப் பல்வேறு பண்ணிலும் (இராகம்) பாடுகின்றனர். அதற்குத் தகுந்தவாறு பதங்களைச் சேர்த்தும், பிரித்தும், பொருளுக்கு இயைபு இல்லாத முறையில் சொற்களைத் துண்டித்தும், மற்றும் பல்வேறு வகையில் சிதைவு செய்தும் பாடிவருகின்றனர். ஆனால், இயல் பாகப் படிப்பவர்களோ சொற்கள் விளங்கப் பிரித்தே பாடல்களைப் படிக்கின்றனர்.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைச் சந்தை சொல்லும் பழக்கம் இப்பொழுதும் இருந்து வருகிறது. சந்தை சொல்வோர் பொருள் மனத்தில் பதியும் முறையில் இரண்டு மூன்று சொற்களாகச் சேர்த்துக் கூறிவருகின்றனர். அவர்கள் பதங்களைப் பிரித்தே ஓதுகின்றனர். எனவே, பாடல்களை இசையுடன் பாடும் முறைக்கும், இசையின்றி ஓதும் முறைக்கும் வேறுபாடுள்ளமை தெரியலாம். பொருள் உணர்ச்சியோடு இலக்கிய நயம் உணர்ந்து கற்பதற்குச் சந்தி பிரித்தல் மிக அவசியம் என்பது இதனுலும் விளங்கும்.

சந்தி பிரிப்பதிலுள்ள ஒரு குறைபாடு செய்யுளின் ஓசை இன்பம் சில இடங்களில் தடைப்படுவதே. பொருளைப் புரிந்துகொண்ட பிறகு, செய்யுட்களை மீண்டும் மீண்டும் படிக்கும்போது, சந்தி தானே இணைந்து இயல்பான ஓசையின்பம் பெரும்பாலும் அமைந்துவிடும்.

ஆனால், உரைநடை நூல்களில் இந்த அளவில் சந்தி பிரித்தல் வேண்டுவதில்லை. உரைநடை பெரும்பாலும், ஒருவரோடொருவர் ஒன்றைக் குறித்து அளவளாவிப் பேசுகின்ற போக்கிலே, காரண காரியத் தொடர்புபட அமைவது. ஆனால், பேசுகின்ற போது மிகுதியாய்ப் பயிலும் சிதைவு வடிவங்களை உரைநடையில் கைவிட்டு, சொற்களை முழு உருவத்தில் அமைப்பது இயல்பு. செய்யுளிற் போலத் தொகுத்தல் விரித்தல் முதலிய விகாரங்களை இதில் மேற்கொள்வதில்லை. அன்றியும், வாக்கியத் தொடர்களில் எழுவாய் பயனிலை ஆகியவை செய்யுளிற் போல மாறி அமைவதும் இல்லை. இதில் ஒரு வகையான கட்டுக்கோப்பு உண்டு. பேசும் போது சொற்கோவையாய் உச்சரிப்பது போலவே உரைநடையிலும் அமைதல் இயல்பே. ஆயினும், சிற்சில இடங்களில் சந்தி பிரித்தல் பொருள் மயக்கத்தை அகற்ற உதவும். அதோடு நிறுத்தற் குறியீடுகள் உரை நடைக்கு மிகவும் அவசியமாகும்.

ஒவ்வொருவரும் இலக்கண விதிகளைப் பயின்று அவற்றின்படி சந்தி பிரித்துக்கொள்வது என்பது எளிதன்று; இக்காலத்தில் இயலாது என்று கூடச் சொல்லலாம். சந்தி முறைகளிலும் காலத்துக்குக் காலம் பல மாறுதல்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. இக்காலத்துக்கு ஒத்த வகையில் சந்தி பிரித்தலை ஒரு வரையறைப்படுத்தி இங்கே கொடுத்திருக்கிறோம்.

# சந்தி பிரித்தலில் சில நியதிகள்

1. ஏ, ஓ, உம், முதலிய இடைச் சொற்கள், ஐ, கு, இல் முதலிய உருபிடைச் சொற்கள் முதலியன தனித்து நிற்கும் ஆற்றல் இல்லாதவை. எனவே இவற்றைப் பிரித்தல் இல்லை. உடைய, அகம், உழை, உள், என்பனவாக வரும் சொல்லுருபுகள் சொல்-நிலைப்பட்டனவாயிருப்பினும், உருபுகள் பெயரைச் சார்ந்துவருதலே மரபு ஆதலால், உருபிடைச் சொற்களைப் போன்றே இவைகளும் கருதப்பெறும்.

சொல்லுருபுகளாக அமைந்த சொற்கள் பெயர் வினைகளாகப் பொருள் தரும்போது சந்தி பிரித்துத் தனிச் சொற்களாகக் காட்டப் பெறும்.

*(உ-ம்)* விடர் அகம் புலம்ப, அவன் உழை இருந்த

2. மெய்யும் உயிரும் ஒன்றி வரும் இயல்பு சந்தி, குற்றுகரத்துடன் உயிர் வந்து இயையும் இயல்பு சந்தி—ஆகியவற்றைப் பிரித்தலில் மயக்கம் நேர இடமில்லை. எனவே, இவற்றை எங்கும் பிரிக்கலாம்.

3. உயிர் முன் உயிர் முதல் மொழி வந்து சேரும்போது உடம்படு மெய் பெற்று வரும் சந்திகளில் உடம்படுமெய் பெரும்பாலும் தவிர்க்கப்படலாம்.

4. உயிரீற்றின் முன் வந்து இயையும் மெய்ம்முதல் மொழியும், மெய்யீற்றின் முன் வரும் மெய்ம்முதல் மொழியும், குற்றுகர ஈற்றுச் சொற்களின் முன் வரும் மெய்ம்முதல் மொழியும், இயையும் சந்தித் தொடர்களே தனிப்படக் கவனித்தற்கு உரியவை. இவற்றில் சந்தியால் நேரும் விகார வடிவங்களைப் பிரிக்குமிடத்துப் பொருளின் தெளிவுக்காகச் சிற்சில நியமங்களை மேற்கொள்ளவேண்டும்.

(1) இவற்றுள் திரிபு சந்திகள் தனித்து நோக்கத் தக்கவை. லகர ளகரம், னகர ணகரம், ஆகியவை திரிபு சந்தியில் றகர டகரங்களாக வரும் இடத்தில் வேற்றுமைப் பொருளின் தெளிவுக்காகச் சில தொடர்களில் சந்தி பிரியாது இருத்தல் நன்று. பெரும்பாலும் இரண்டாம் வேற்றுமைத் தொகை வரும் இடங்களும், ஏழாம் வேற்றுமைத் தொடர் முதலியன வரும் இடங்களும் இவ் விதியைப் பெறும். சந்தி பிரியாமல் இருந்தபோதிலும், வருமொழி இடைவெளி விட்டுப் பிரித்துக் காட்டப்படும்.

(உ-ம்) காமற் கடந்த வாமன்
கருங் கோற் குறிஞ்சிப் பூ
அழற் கொடியோன்
கட் புலன்
முதற் பதிப்பு

(2) இருமொழியும் திரியும் இடத்தில் இணைகோட்டைப் பயன் படுத்தலாம்.

(உ-ம்) நின்-தொழுதேற்கும்
நன்னன்-தேய்த்து
எள்-துணை

5. இரட்டித்து வரும் சந்திகள்:

(1) சுட்டு வினாக்களின் முன் உயிர் வந்து வகரம் தோன்றி இரட்டிக்குமிடத்து, வருமொழியை மட்டும் பிரித்தல்: வருமொழியில் மெய் வந்து இரட்டிக்குமிடத்து, வருமொழி விளங்கும் வகையில் இடை வெளி விட்டுக் காட்டுதல்.

(உ-ம்) அவ்விடம் - அவ் இடம் அத்தினம் - அத் தினம்
இவ்வாணை - இவ் ஆணை இம்மொழி - இம் மொழி
எவ்வுலகம் - எவ் உலகம் எக்காலம் - எக் காலம்

(2) தனிக் குறில் முன் ஒற்று அடுத்து வரும் பதங்களில் உயிர் முதலாக வரும் தொடர்களும் இம் முறையில் அமையும்.

(உ-ம்) கண்ணிலை - கண் இலை
எண்ணரிது - எண் அரிது
கள்ளுண்டான் - கள் உண்டான்
மின்னாற்றல் - மின் ஆற்றல்
நல்லடி - நல் அடி

6. சிறு, நெடு, முதலிய உகர ஈற்றுப் பண்பு முதல்-நிலைகள் சந்தியில் இரட்டித்தும், விகாரமாயும் வந்துள்ள தொடர்களில் சந்தி பிரித்தல் இல்லை.

(உ-ம்) சிற்றிடை சிறிதழ் சிறியாழ் சிறியிலை
சிறடி நெட்டலம் நெட்டிதண்

7. செம்மை, பசுமை என்னும் நிலைமொழிகளோடு பிற சொற்கள் இணைந்து திரிந்து வரும் இடத்தும் பிரித்தல் இல்லை.

(உ-ம்) சேவடி, சேயிழை, பாசிலை, பைந்தார்

8. கருங்கண், நெடுந்தோள், முதலிய பண்புத் தொடர்களில் கருமை, நெடுமை என்பனவே சொல்வடிவமாதலின், மகர ஈறுகப் பிரித்தல் பொருத்தம் அன்று. சந்தியால் நேர்ந்த விகார வடிவையே மேற்கொள்ளல் வேண்டும். ஆனால் பண்புப் பொருள் விளங்கச் சிறிது இடைவெளி விட்டு, கருங் கண், நெடுந் தோள் என்று இவ்வாறு அமைத்தல் நன்று.

(உ-ம்) பெருந் தோள் குறும் பலா

வேற்றுமைத் தொகையும் வினைத் தொகையும் இவ் இயல்பு உடையனவே.

(உ-ம்) கைக் களிறு, பொற் பூண், கொல் யானை, உண் கண்

9. ஒண்மை, மென்மை, வண்மை, வெண்மை முதலியனவாக வரும் பண்புச் சொற்கள் சேர்ந்து வரும் தொடர்களை ஒள், ஒண்; மெல், மென்; வள், வண்; வெள், வெண்;—என்று இவ்வாறு வருமொழிக்கு ஏற்ப இரு வகையாகவும் கொள்ளுதல் நேர்மையாகும்.

(உ-ம்) ஒண்டொடி - ஒண் தொடி ஒள்ளெரி - ஒள் எரி
மென்றுகில் - மென் துகில் மெல்லிலை - மெல் இலை
ஒண்ணுதல் - ஒள் நுதல் வள்ளிதழ் - வள் இதழ்
வெண்டுகில் - வெண் துகில் வெள்ளொளி - வெள் ஒளி

இங்ஙனமே வன்மை, நன்மை, புன்மை, தெண்மை, முதலியனவும் இரு வேறு வகையில் பிரிந்து நிற்கும் இயல்புடையவை.

10. பண்புச் சொற்களேயன்றி, அகல், வியல், வால் முதலிய சொற்களும் சிற்சில சந்தித் தொடர்களில் லகர ஈறுகப் பிரிவுபடும் நிலையேயன்றி, அகன், வியன், வான், என னகர ஈறுக நிற்றலும் உண்டு.

(உ-ம்) அகனிலம் - அகல் நிலம் அகன் சோணுடு
வியனிலம் - வியல் நிலம் வியன் புலம்
வானிணம் - வால் நிணம் வான் புழுக்கு

11. செம்மலர் என்பது செங்கல் என்பதைப் போல ஒரு பெயர் நீர்மைத்தாய் அமைந்தது ஆதலின் இடைவெளி இல்லாமல் இருத்தலே தக்கது.

(உ-ம்) செம்மலர் (தாமரை) வெண்குடை
செங்கோல் முழுமதி
செந்நெல் இளவேனில்
கருமுகை செவ்வாய்

12. அன்மொழித் தொகையாய்த் தொடர்மொழி அமையுமாயின், அவைகள் ஒருமொழி போன்றே கொள்ளப்படும். இத் தொடர்களில் சந்தி பிரித்தலும் இல்லை; இடைவெளி விடுதலும் இல்லை.

(உ-ம்) நேரிழை, சேயிழை, பாசிழை, ஆயிழை, ஆண்டகை,
நன்னுதல், ஒண்டொடி, கருங்குழலாய்,
நேரிழாய்

13. உவமத் தொகைச் சொற்களும் சந்தி பிரியாது ஒருமொழி நீர்மையவாய தொடராகவே கருதப்பெறும்.

(உ-ம்) மதிமுகம், பவளவாய், பிறைநுதல்

14. தொடர்மொழிகளில் சில ஒரு பொருளைச் சுட்டுதற்கு வருமாயின், அவற்றைப் பிரித்தல் இல்லை.

| | | |
|---|---|---|
| (உ-ம்) பாற்கடல் | களிற்றினம் | சூரரமகளிர் |
| மண்ணுலகம் | வண்டினம் | நீரரமகளிர் |
| அரவணை | புள்ளினம் | வரையரமகளிர் |

15. ஆருயிர், பேருலகம், இன்சொல், காரிரும்பு என்று இவ்வாறு வரும் தொடர்களில், அருமை, பெருமை, இனிமை, கருமை, என்பன முற்றும் வடிவில் வேறுபட்டு ஆர், பேர், இன், கார் என வருகின்றன. எனவே, ஆர், பேர், இன், கார் என்பன அருமை, பெருமை, இனிமை, கருமை என்பவற்றிலிருந்து கிளைத்த ஒரு தனிச் சொல் என்றே கொள்ளுதற்கு உரியனவாம். இவைகள் ஆர் உயிர், பேர் உலகம், இன் சொல், கார் இரும்பு, எனப் பிரித்துக் காட்டப் பெறவேண்டும்.

(உ-ம்) ஆர் இடை பேர் அமளி
இன் குணம் கார் இருள்

16. அன்ன, அனைய, என்ன, என, ஆங்கு, என்னும் சொற்கள் உவமையுருபாய்ப் பெயருடன் கூடி வந்தால் பிரிக்கலாம்; வினையுடன் இணைந்துவந்தால் பிரியாதிருத்தல் நலம். உவமைச் சொற்களையும் பிரித்தல் இல்லை.

(உ-ம்) கூழுர் கிளை என
முத்து அன்ன வெண் நகை;
சிறுமதி கிடந்தென
கிளைகள் விரிந்தென்ன
ஞாயிறு கடற் கண்டாஅங்கு
நெற்றுக் கண்டன்ன
கண்டாலன்ன

17. போல, போலும் என்ற சொற்கள் இடைவெளி விட்டுக் காட்டப்பெறும். போல் என்று விகாரப்பட்டுவரும்பொழுது இடைவெளி இன்றி அமைக்கப்பெறும்.

(உ-ம்) சிலைவலான் போலும் செறிவினன்
கண் உள்ளன போலக் காட்டி
கண்போல் நெய்தல்

18. ஒலிக்குறிப்புச் சொற்களும் நிறம் முதலியன பற்றி வரும் சொற்களும் பிரியாது கொள்ளப்பெறும்.

(உ-ம்) இழுமென் அருவி
மெல்லென்று
நள்ளென் கங்குல்
தண்ணென் கடல்-திரை
புல்லென் அட்டில்
வெள்ளென்று

19. தண்ணம், மெல்லம், போன்றவற்றை ஒரே தொடராகக் கொள்ளுதலே பொருளுக்குப் பொருத்தமாம். இம் மாதிரி வரும் தொடர்களில் 'அம்' மைத் தனியே பிரித்தல் இல்லை.

(உ-ம்) தண்ணம் துறைவன்
மெல்லம் புலம்பன்

20. கொல், மாதோ, மதி, காண், கண்டீர், முதலியன பெரும்பாலும் அசைநிலைகளாக வருவன. இவைகள் பெயர் வினைகளை அடுத்து, அசையாக வரும்போது தனிப் பொருள் இன்றி ஓசை நிறைத்தல் மாத்திரையாய் வருதலின், இடை வெளி விட்டுப் பிரித்தல் பொருந்துவதன்று. எனவே, இந்த இடைச் சொற்கள் இடைவெளி விட்டுப் பிரிக்கப்படா.

(உ-ம்) வருவர்கொல் வயங்கிழாய்
இவ்வளவில் செல்லுங்கொல்?
உழந்தன்றுமாதோ
கேண்மதி
முககுறி நன்றுகாண்
மறைக்குமாம்கண்டீர்

21. உடன் என்பது சில இடங்களில் 'சேர', 'கூடி' என்ற பொருள் களிலும், வேறு சில இடங்களில் உம்மைப் பொருளிலும் வருகின்றது. உம்மைப் பொருளில் வருமிடத்தில் மட்டும் பிரியாது, 'சேர' முதலிய பொருள்களில் வரும்பொழுது பிரித்து அமைக்கப்பெறும்.

(உ-ம்) மஞ்ஞை பலவுடன்
கோடு பல உடன் வாய்வைத்து

22. 'அம்' சாரியையாக வரும்பொழுது பிரித்து நெருக்கப்பெறும்; 'அழகு', 'நீர்' முதலிய பொருளில் வந்தால் பிரிக்கப்படும்.

| | |
|---|---|
| (உ-ம்) கைதைஅம் கானல் | அம் தாமரை |
| வெள்ளிஅம் போது | அம் தாழ் சடையார் |
| பொன்அம் பொதும்பர் | அம் கலுழ் மேனி |

23. தான், தன், தாம், தம் என்பன அசையாக முன் பெயருடன் தொடரின், பிரித்து இடைவெளியின்றி நெருக்கப்பெறும். தனித்து நின்று பொருள்தரின் இடைவெளி விட்டுக் காட்டப்பெறும்.

| | |
|---|---|
| (உ-ம்) அவர்தாம் | தன் நாடு |
| நீதான் | தன் அரண் |
| செல்வர்தம் பின்னர் | தம் பொருள் |

24. (1) எண்ணுப் பெயர் வரும் இடங்களில் இடைவெளி உண்டு. ஆனால், மூன்று, ஐந்து, என்பவை விகாரப்பட்டு முதலெழுத்து மட்டுமே நின்று எண்ணைச் சுட்டி வருமிடத்து இடைவெளி விடுதல் இல்லை.

| | |
|---|---|
| (உ-ம்) இரு வகை | மூஅடி |
| நால் தடந் தோள் | மூஉலகம் |
| அறு சுவை | மூவகை |
| எண் குணம் | ஐவேறு |
| எண் திசை | ஐவகை |

(2) பெருக்கும் நிலையில் வரும் எண்ணுப் பெயர்களுக்கு இணை கோடு இடுதல் உண்டு.

(உ-ம்) ஆறு-இரு மதி
எண்-நான்கு
ஈர்-அறு தடந் தோள்
ஈர்-இரு மருப்பு

25. ஆயின், ஆயினும், ஆதலின், ஆதலால், ஆகலின், எனின், என்னின், என்ருல், முதலியவை சேர்ந்துவரும் தொடர்கள் பிரித்து, இடைவெளியின்றி நெருக்கிக்கொள்ளப்பெறும்.

(உ-ம்) செல்குவிர்ஆயின்    துளக்கியதுஆதலின்
வரும்எனின்    தற்பத்தைத் துடைத்ததுஎன்ருல்

ஒரு சில இடங்களில் வாக்கியத் தொடரின் தொடக்கத்தில் ஆயின், ஆதலின், ஆதலால், முதலியன தனித்து நிற்றலும் உண்டு.

(உ-ம்) ஆதலால், அவனைக் காண
ஆதலால், அஞ்சினேன் என்று அருளலே

26. ஆகி, ஆகும், உடைய, என்பன குறைந்து, ஆய், ஆம், உடை என நிற்கும் இடங்களில் அவற்றைப் பிரித்தல் இல்லே. ஆக என்பது ஆ எனக் குறைந்து நிற்றல், எனினும் என்பது ஏனும் என விகாரப்படுதல் போன்ற பிற இடங்களிலும் இங்ஙனமே சந்தி பிரியாது மேற்கொள்ளப் பெறும். ஆய் முதலியன தனி நிலேயில் நின்று, பெயர் வினேப் பொருளேச் சுட்டுமிடத்தில் மட்டும் இடைவெளி விட்டுப் பிரிக்கலாம். ஆம் என்பது முற்றுப் பொருளில் வரும் இடங்களிலும் பிரித்து இடைவெளி விடப்பெறும்.

(உ-ம்) அவளே நீயாய்    அவருடை நட்பு
வியனும் பரகதி    அன்பே தகளியா
அன்புடை நல்மொழி    கையரேனும்

ஆய் வினவினள்    ஆம் அறல் சுனே
ஆய் மட நிலே    ஆம் அறல் பருகும்
ஆய் கொடிக் கவலே    தலேவிக்குக் கூறியதூஉம் ஆம்

ஆ மேய் புலம்    உடை உடீஇ
உடை நிறை கடம்

27. கேண்மின், சென்மின், முதலிய வினே வடிவங்கள் ஒரு சொல் ஆதலின் அவற்றினிடையே பகுதியில் சந்தி பிரித்தல் இல்லே.

ஒலித்தக்கால், உண்பான், வந்தென, முதலிய சொற்களில் கால், பான், என, முதலியவற்றையும் பிரித்தல் இல்லே. இங்ஙனமே, பின், முன், கடை, வழி, இடத்து, முதலிய பிற வினேயெச்ச ஈறுகளும் பிரியாது ஒரு சொல்லாகவே கருதப்பெறும்.

(உ-ம்) புலி பசித்தென    சொல் செல்லாவழி
ஊழ் உற்றக்கடை    விக்குள் வாராமுன்
கற்றபின் நிற்க    ஒலித்தக்கால் என்னும்

28. துணைவினை முதலிய இயல்புகளால் ஒருசொல் நீர்மையவாகி விட்டனவற்றைப் பிரித்தல் இல்லை.

(உ-ம்) புகையுண்ட, பணித்தருள், கொலையுண்டு,
பனிப்புற, தீயூட்டிய, பிணிப்புண்டு, அணங்குறும்,
இன்புறு, கண்மாறல், முழுமக்கள்

29. மரபுத் தொடர்கள் தனிப்பட்ட பொருளுடையனவாய், சொற்கள் உணர்த்தும் நேர்பொருளிலிருந்து மாறுபட்டதோர் கருத்தை வெளியிடுவனவாய் அமைகின்றன. எனவே, இவற்றையும் பிரித்தல் இல்லை.

(உ-ம்) இடையற (முற்றும்)
தலைதடுமாற்றம் (நிலைகுலைதல்)
வேரறுத்தல், கட்டழித்தல் (முற்றும் அழித்தல்)
வாய்வைத்தல் (ஊதுதல்)

30. 'தரிக்கென', 'வாழ்கென', என வருவன, 'தரிக்க என', 'வாழ்க என,' என்பவற்றின் நிலைமொழி அகரம் தொக்குநிற்கச் சேர்ந்த சந்தித் தொடர்கள். இவற்றைப் பிரித்தால், 'தரிக்கவென' 'வாழ்கவென' என்பவை சந்தியில் பிரிந்து காணும் நிலையோ என்ற ஐயுறவு நேரும். எனவே, இவற்றைப் பிரியாதிருத்தலே தொடர் விளக்கத்திற்கும் ஓசையின் ஒழுக்கிற்கும் அமையும். ஆயினும், பொருளின் தெளிவு கருதி, இங்ஙனம் அகரம் தொக்குச் சேர்ந்த தொடர்களையும் பிரித்துக் காட்டுதல் ஒருசில இடங்களில் அவசியமாகிறது.

(உ-ம்) 'வருக' என வந்து, 'போக' எனப் போகிய
கரு நெடுங் கண்ணி காண் வரிக் கோலமும்

31. வடமொழித் தீர்க்க சந்திகளைப் பிரித்தல் இல்லை.

(உ-ம்) பஞ்சவடி, சடாடவி, கராசலம்

32. இங்குக் குறித்த விதிகள் அபூர்வமாகச் சிற்சில இடங்களில் ஒருசில இன்றியமையாத காரணங்களுக்காகத் தவிர்க்கப்பெறலாம். முக்கியமாகச் சிலேடைப் பொருள் தரும் தொடர்மொழிகளைப் பாடலில் பிரித்துக் காட்டுதல் இயலாது.

இங்குக் குறித்த இடங்கள் தவிர, மேலும் அவசியம் எனத் தோன்றிய ஒருசில இடங்களில் பொருளின் தெளிவிற்கு இன்றியமையாத வகையில் பிரித்தும், பிரியாதும், பிரித்து நெருக்கியும், இணைகோடு இட்டும், தக்க வண்ணம் இடத்திற்கு இயைய மேற்கொள்ளுதலும் உண்டு.

(உ-ம்) நாண்மலர் - நாள்மலர்
கோண்மீன் - கோள்மீன்

# நிறுத்தற் குறியீட்டு முறைகள்

ஒருவரோடு ஒருவர் உரையாடும்போது, பேசுவோர் தமது குரலில் ஏற்றத்தாழ்வு செய்தும், இடையிடையே சற்று நிறுத்தியும், கூறவந்த செய்திக்குத் தக்கவண்ணம் வேகமாகவோ மெதுவாகவோ எடுத்து உரைத்தும், கேட்போருக்குத் தமது எண்ணங்களை வெளியிடுகின்றனர். பலர் கூடியுள்ள ஒரு பெருங் கூட்டத்தில் பேசுவோரிடத்தும் மேற்கண்ட தன்மைகளைக் காணலாம். பேசுவோர் மேற்கொள்ளும் இவ்வகையான ஒலிபேதங்கள் முதலியன, அவரது பேச்சு வெற்று ஒலித் திரளாய் அமையாமல், கேட்போருக்கு விளங்கவைக்கும் ஒரு சாதன மாய் அமைகின்றது. இதுபோன்றே எழுதும்போதும், நூல்களை அச்சியற்றும்போதும், சொற்பொருளைத் தெளிவுபடுத்தப் பேருதவி புரிபவை நிறுத்தற்குறியீடுகள் ஆகும்.

ஆங்கில மொழி நம் நாட்டில் பழக்கத்திற்கு வந்த பின்னரே, எழுதும்போது நிறுத்தற்குறியீடுகளை உபயோகித்தல் நலம் என நம்மவர் கருதினர். அதற்குமுன் எழுத்தப்பட்ட நூல்களிலே முடிவுகளைக் காட்டக் குறிகளோ சொற்களைப் பிரித்துக் காட்டுதலோ இருந்ததில்லை. எல்லாம் ஒன்றோடு ஒன்று பிணைப்புண்ட நெடுந் தொடராகவே அமைந்திருந்தன. ஏடுகளில் பாடலின் எண்களை இடையிடையே குறிக்கும் வழக்கத்தால் பாடல்களின் தொடக்கம் முடிவுகளை மட்டும் கண்டுகொள்ள வசதி இருந்தது. நீண்ட பாடல்களில் முதல் இறுதி காணுதல் அத்தனை எளிதன்று; நுணுகி ஆராய்ந்து பார்க்கவேண்டும் நிலைமையில் சுவடிகள் அமைந்தன.

நமது மொழியில் வசன நூல்களில் குறியீடுகளைப் பலரும் உப யோகித்துவந்தபோதிலும், செய்யுளில் இவற்றை உபயோகிக்க முற் பட்டது சமீப காலத்திலேதான். செய்யுள் நூல்களை அச்சிடத் தொடங் கியபோது பாடலுக்குப் பாடல் இடம் விட்டுப் பதிப்பித்தனரே யன்றி, அடிகளைத் தனித்தனிப் பிரித்துக் காட்டவில்லை. பின்னர், ஒரு சிலர் அடிகளைப் பிரித்துக் காட்ட இடையே சிறுகோடிட்டும், உடுக்குறியிட்டும் பதிப்பித்தனர்; மற்றும் சிலர் இதற்குக் காற்புள்ளிகளை உபயோகித்தனர்.

வரவர, செய்யுட்களின் அடிகள் தனித்தனி அமைய, ஒன்றன் கீழ் ஒன்ருகச் சற்று இடைவெளி விட்டுப் பதிப்பிக்கலாயினர். அதோடு ஒரு சிலர் ஒவ்வோர் அடியின் இறுதியிலும் உடுக்குறிகளை அமைத்தும் உள்ளனர். களத்தூர் வேதகிரி முதலியாரின் நாலடியார் உரை நூலைப் பின்பற்றி வீரபத்திர செட்டியார் துந்துபி வருஷத்தில் பதிப்பித்த நூலில், ஒவ்வொரு வரியின் ஈற்றிலும் புள்ளிகளுடன் உடுக்குறிகளும் தனிச் சொல்லின் முன் இணைகோடும் காணப்படுகின்றன. இவை அழகிற்காக இடப்பட்டனவாகத் தோன்றுகின்றனவே அன்றி, வேறு பயன் கருதி இடப்பெற்றனவாகத் தெரியவில்லை.

முன்பு அச்சிட்ட நூல்களில் குளகச் செய்யுள் முத்தகச் செய்யுள் என்ற பேதம் இன்றிப் பாடல்களின் முடிவில் முற்றுப் புள்ளி இடுதலையும், நேரிசை வெண்பாக்களின் தனிச் சொல்லுக்கு முன் சிறு கோடு இடுதலையும் மேற்கொண்டு வந்திருக்கின்றனர். இவற்றைத் தவிர, காற்புள்ளி, அரைப்புள்ளி முதலிய குறியீடுகள் செய்யுள் நூல்களில் இடம் பெறவில்லை.

பொதுவாகப் பாடல்களில் சொற்களைப் பிரித்தலின்றிச் சந்தித் தொடர்களாய் அச்சியற்றி வந்தமையால், இடையிடையே கருத்து முடியும் தொடர்களுக்குக் குறியீடு அமைக்கக்கூடவில்லை. அதோடு வாக்கியத் தொடர்கள் அடிகளில் முன்பின்ருகவும் அமைந்துவிடுதல் உண்டு. இவற்ருல் பாடல்களில் சொற்பொருள் அமைதியை விளக்கக் குறியீடு அமைக்க இயலாதவராயினர். எனினும், செய்யுளிலக்கணத்தை மேற்கொண்டு, அடிகளில் சீர்களைப் பிரிவினை செய்து காட்டப் இடைவெளி விட்டும், நேரிசை வெண்பாக்களில் தனிச் சொல்லைப் பிரித்துக் காட்டச் சிறுகோடு இட்டும் வந்தனர். 1895-இல் திரு. வெ. ப. சுப்பிரமணிய முதலியார் தமது 'சுவர்க்கநீக்கம்' முதற்காண்டப் பதிப்பில் சீர் முறையில் பாடல்களைப் பதிப்பித்தும், சந்தி பிரித்தலால் யாப்புமுறை சிதையுமிடத்து, சந்திபிரித்துப் பொருள்கொள்ளவேண்டும் என்பதற்கு அடையாளமாக ஒரு குறி யிட்டும் காட்டியுள்ளார். அன்றியும், காற்புள்ளி, அரைப்புள்ளி முதலிய குறியீடுகள் பாடலில் எங்கெங்கு அமைந்தால் பொருள் தெளிவுறுமோ, அங்கங்கே அமைத்துள்ளனர். இயற்கையாகவே சொற்கள் பிரிவுபட்டிருந்தால் குறியீடுகளை அச்சொற்களை அடுத்து அமைத்தும், சந்தி பிரியாத தொடரில் பிரித்துக் குறியீடு கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவிக்க, பிரிக்கவேண்டும் எழுத்துக்களின் கீழே குறியீடுகளை அமைத்தும் பதிப்பித்துள்ளனர். நன்னூல் பதிப்பில் போப்புப் பாதிரியார் மேற்கொண்டுள்ள குறியீட்டு முறைகளைப் பின்பற்றித் தமது நூலில் அமைத்திருப்பதாகத் திரு. முதலியார் அவர்கள் தமது முகவுரையில் குறித்துள்ளார்கள். திரு. முதலியார் அவர்கள் மேற்கொண்ட முறையில், சந்தி இலக்கணமும் குறியீட்டு

மரபுகளும் நன்கு உணர்ந்தவரால் மட்டும் அவற்றைப் பயன்படுத்தக் கூடுமேயன்றி, சாதாரணமான அறிவுடையவர்களால் புரிந்துகொள்ள இயலாது.

இன்னும் சிலர், மிகுதி, திரிபு, முதலியவற்ருல் வரும் சந்தி எழுத்துக் களோடு குறியீடுகளேயும் அமைத்துள்ளனர். நிறுத்துவதற்காக அமைக் கும் குறியீடுகளுடன், பின்வரும் சொல்லின் சேர்க்கையைக் காட்டும் சந்தி எழுத்துக்களேயும் வைத்துக்கொள்வது பொருத்தமாக இல்லே. தலேவருடாக், யாது என்னக், எழில் நோக்கித், கணிஒழியத், குடிஉயரத்; என்று இவ்வாறு காட்டப்பெறுதலில் குறியீடு நிறுத்தத்தையும், வல் லெழுத்து வருமொழியோடுள்ள சந்தி இணேப்பையும் காட்டும் என எண்ணலாம். ஆயினும், பொருள்பட எச்சத் தொடர் முதலியவற்றை நிறுத்தி வாசிக்குமிடத்தில் சந்தியை நீக்கிக் குறியீடு அமைத்தலே நலம் எனத் தோன்றுகிறது.

திரு. செல்வக்கேசவராய முதலியார் பதிப்பித்த 'பழமொழி', 'ஆசாரக்கோவை' முதலிய நூல்களில் பாடல்களேச் சீர் முறையில் இடைவெளி விட்டு மேற்கொண்டாலும், பெரும்பாலான சந்திகளேப் பிரித்தும், காற்புள்ளி, அரைப்புள்ளி, முதலிய குறியீடுகளேப் பாடல் களின் இடையிடையே கொடுத்தும் உள்ளார். இவரது முறையில் வாக்கிய மாக உள்ள தொடர்களுக்குக் குறியீடு உள்ளனவேயன்றி, பெயர்ச் சொற்கள், எச்சமுடிபுகள், முதலியன குறியீடுகளால் விளக்கப்பெற வில்லே. மேலும், முன்பின் கொண்டுகூட்டுப் பகுதிகள் வரையறை செய்யப்பெருமல் நிற்கின்றன.

இவ்வகைக் குறைகளெல்லாம் நீங்கச் சீர்முறையைக் கைவிட்டு, எல்லாச் சொற்களேயும் சந்தி பிரித்து, குறியீடுகள் அமைப்பது மிகமிக அவசியம். இம்மாதிரிப் பதிப்பித்தால் மூலபாடத்தைப் படித்துப் பாட லின் பொதுப் பொருளே எளிதில் உணர்ந்துகொள்வதோடு சொல்முடிவு முதலியவற்றையும் நன்கு தெரிந்துகொள்ள இயலும். பாடலில் வரும் இரண்டொரு அருஞ்சொற்களுக்குப் பொருள் தெரிந்துகொண் டால் மட்டும் போதும். பாடலே வாசித்து அனுபவிக்க, சாதாரண மான அறிவுடையார்க்குக் கூட எளிதாக அமையும். இதனுல், தமிழ் நூல்களின் அருமை பெருமைகள் விளங்குவதோடு, இலக்கிய நூல்களே மேலும் மேலும் கற்கும் அவாவும் மக்களிடையே பெருகும்.

பாடல்களில் சந்தி பிரித்தலும், குறியீடுகள் அமைத்தலும், ஓசை யுடன் ஓதுவார்க்குத் தடையாகவுள்ளன என்று கருதுவாரும் உண்டு. பாடல்களேப் பொருள் தெரியாமல் ஓதுதலினுல் யாதொரு பயனும் இல்லே. ஓதுபவரும் கேட்போர்க்குப் பொருள் விளங்கும் வண்ணம் இன்றியமையாத இடங்களில் சற்று நிறுத்தியே ஓதுதலே நாம் காணலாம். பொருள் தெளிவுற விளங்கச் சந்தி பிரித்தலும், குறியீடுகள் அமைத்தலும்

அவசியம். பொருள் உணர்ந்து படித்தபின் ஒருவன் பாடல்களை இசையுடன் ஓதத் தொடங்கினுல், அவனுக்கு இவை தடையாக அமையா. சொற்களை விரைந்து இசைத்தலினுல் சந்தியினுல் உண்டாகும் ஓசை பெரும்பாலும் தாஞகவே அமைந்துவிடும். ஓதும்போது குறியீடுகளின் அவசியம் வேண்டுவதில்லை ஆதலின், குறியீடுகளை அப்போது மறந்துவிடலாம்; எனவே, பொருள் தெரிந்து பாடல்களைப் படித்த ஒருவனுக்கு இசையுடன் ஓத இந்த இரண்டும் பெருந் தடைகள் ஆகா.

பாடல்களின் பொருள்களை நெறிப்படுத்தும்பொருட்டு நிறுத்தற் குறியீடுகளை உபயோகிப்பது பற்றிக் கருத்து மாறுபாடு கொள்வார் இக்காலத்து அரியர். ஆனுல், எந்த அளவுக்குக் குறியீடுகளை மேற்கொள்வது என்பதிலேதான் கருத்துவேற்றுமைகள் நிலவுகின்றன. குறியீடுகளை எவ்வளவுக்கு எவ்வளவு குறைத்து உபயோகிக்க இயலுமோ அந்த அளவுக்குக் குறைத்து உபயோகிப்பது நல்லது என்பது ஒரு சாரார் கருத்து. மற்ருெரு சாரார் உரை இல்லாத மூல பாட நூல்களில் குறியீடுகளை மிகுதியாக உபயோகிக்கவேண்டுவது அவசியம் என்பர். மிகுதி குறைவு என்னும் பாகுபாட்டைப் பற்றி எண்ணுமலே பாடலின் பொருள் தெளிவுக்கு வேண்டும் அளவில் குறியீடுகளை மேற்கொள்ளுதலே சிறந்த முறையாகும்.

குறியீடுகள் பற்றிய விவரம் வருமாறு:

சாதாரணமாக வழங்கப்பெறும் குறியீடுகளாவன:—

| | | |
|---|---|---|
| காற்புள்ளி | , | காமா |
| அரைப்புள்ளி | ; | ஸெமிக்கோலன் |
| முக்காற்புள்ளி | : | கோலன் |
| முற்றுப்புள்ளி | . | புல் ஸ்டாப் |
| உணர்ச்சிக் குறி | ! | எக்ஸ்க்ளமேஷன் |
| வினாக்குறி | ? | இன்டெராகேஷன் |
| மேற்கோள் குறி-ஒற்றை | ' ' | கொட்டேஷன் மார்க் |
| மேற்கோள்குறி-இரட்டை | " " | கொட்டேஷன் மார்க் |
| சிறுகோடு | — | டாஷ் |
| இணைகோடு | - | ஹைபன் |
| பிறை வளைவு | ( ) | பிராக்கட் |
| பகர வளைவு | [ ] | ஸ்கொயர் பிராக்கட் |

## காற்புள்ளி

1. பெயர்கள் அடுக்கிவரும் இடம்:

சண்பகம், மாதவி, தமாலம், கருமுகை,
வெண்பூ மல்லிகை, வேரொடு மிடைந்த
அம் செங்கழுநீர், ஆய் இதழ்க் கத்திகை

(சிலப். 8, 45-47)

2. வினையெச்சத் தொடர்கள் அடுக்கிவரும் இடம்:

இணை நெடுங் கண் ஓர் இந்து முகத்தி பூ-
அணை அடைந்து, இடியுண்ட அரா என,
புணர் நலம் கிளர் கொங்கை புழுங்கிட,
உணர்வு அழுங்க, உயிர்த்தனள் ஆவியே.

(கம்ப. உலாவியற். 29)

உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடர,
மேனகை வெள்ளடை உதவ,
செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல,
அரம்பையர் குழாம் புடை சுற்ற,

(கம்ப. காட்சிப். 75)

3. பெயரெச்சத் தொடர்கள் அடுக்கிவரும் இடம்:

எற்றின, எறிந்த, வல்லே ஏயின, எய்த, பெய்த,
முற்றின படைகள்

(கம்ப. பிரமாத்திரப். 125)

சொற்கள் அடுக்கிவரும்போது இறுதிச் சொல்லுக்குக் காற்புள்ளி இன்றி அமைத்தலும் உண்டு. எனினும், பொருள் தெளிவு பெற இறுதிச் சொல்லையும் குறியீட்டினால் பிரித்தல் நன்று. அல்லாவிடின், அடுத்துவரும் வினை கடைசிச் சொல்லோடு மட்டும் பொருந்துவதாகப் பொருள் கொள்ள நேரும்.

4. எச்ச முடிபுகளைக் காட்ட: (ஆனால் எச்சம் பின்வரும் சொற்களோடு பொருள் தொடர்பு அமைந்ததாக இருந்தால் காற்புள்ளி இடுவதில்லை.)

நயம் கிளர் நான நெய் அளாவி, நந்தல் இல்
வியன் கருப்பூரம் மென் பஞ்சின் மீக்கொளீஇ,
கயங்களில் மரை மலர்க் காடு பூத்தென,
வயங்கு எரிக் கடவுளும், விளக்கம் மாட்டவே,

(கம்ப. இராவணன் அணங்குறு. 18)

5. இருவகை வினைமுற்றும் எச்சப் பொருளில் வரும் இடம்:

வன்பொறை நெஞ்சினன் வருத்தம் உன்னுவாள்,
என்பு உற உருகினள்;

(கம்ப. உருக்காட்டு. 95)

மின்னுடை வேத்திரக் கையர், மெய் புகத்
துன் நெடுங் கஞ்சுகத் துகிலர், சோர்விலர்,
பொன்னொடு வெள்ளியும், புரந்தராதியர்க்கு
இன் இயல் முறை முறை இருக்கை ஈயவே,

(கம்ப. இராவணன் அணங்குறு. 16)

6. இரண்டிற்கு மேற்பட்ட உம்மை அடுக்கு:

அகநிலை மருதமும், புறநிலை மருதமும்,
அருகியல் மருதமும், பெருகியல் மருதமும்,
நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி;

(சிலப். 8, 39-41)

'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பு அறுத்த தண்புனல் நல் நாட்டு,
மாட மதுரையும், பீடு ஆர் உறந்தையும்,
கலி கெழு வஞ்சியும், ஒலி புனல் புகாரும்,
அரைசு வீற்றிருந்த உரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ் துணை ஆகிய
இன் இளவேனில் வந்தது இவண்' என,

(சிலப். 8, 1-8)

இதுபோன்ற இடங்களில் உம்மையே பொருளைத் தெளிவு படுத்தலால் காற்புள்ளி அவசியமில்லை என்று சிலர் கருதுவர்.

7. ஏழாம் வேற்றுமைப் பொருள் சுட்டிய இடம்:

மேலே உள்ள உதாரணத்தில் ''தண் புனல் நல் நாட்டு'', என 'நாட்டு' என்பதன் பின் காற்புள்ளி இடப் பெற்றுள்ளமை நோக்குக. இங்கே நாட்டின்கண் என்பது பொருளாம்.

விராவ அரு வனத்து, அவன் விளம்ப, உறைகின்றார்;

(கம்ப. இராவணன் அணங்குறு. 57)

இங்கே 'வனத்து' என்பது வனத்தின்கண் என்ற பொருளில் வருகிறது.

8. இடைப்பிறவரல் வரும் இடம்:

மாலை வாங்கிய வேல்அரி நெடுங்கண்,
கூல மறுகின், கோவலற்கு அளிப்ப— (சிலப். 8, 72-73)

தீ மொய்த்த அனைய செங் கண் அரக்கரை முழுதும் சிந்தி,
பூ மொய்த்த கரத்தர் ஆகி விண்ணவர் போற்ற, நின்றான்.
(கம்ப. மூலபல வதைப். 229)

9. முடிவு குறிக்கவேண்டிய இடம்: (முடிவுச் சொல் முன்னரும் எழுவாயோ, எச்சச் சொல்லோ பின்னருமாகப் பாடல்களில் வரும் பொழுது, முடிவுச் சொல்லின் ஈற்றில் காற்புள்ளி இட்டுக் காட்டுதல்.)

கண்ணகி அணி மணிக் காற் சிலம்பு உடைப்ப,
மன்னவன் வாய்முதல் தெறித்தது, மணியே—
(சிலப். 20, 71-72)

வெல்வதும் தோற்றல்தானும்
விளையாட்டின் விளைந்த, மேல்நாள்.
(கம்ப. காட்சிப். 138)

குந்தி வந்தனன், நெடுநிலம் குழிபட,
குரை கடல் கோத்து ஏற.
(கம்ப. கும்பகருணன் வதைப். 342)

10. மேற்கோள் தொடங்கும் முன்:

ஆங்கு-அவர் தம்முடன், 'அறவண அடிகள்
யாங்கு உளர்?' என்றே இளங்கொடி வினாஅய்,
(மணி. 12, 1-2)

## அரைப்புள்ளி

1. காற்புள்ளி வரவேண்டும் ஒருசில இடங்களில், அதற்குமுன் அதே வாக்கியப் பகுதியில் வேறு காற்புள்ளிகள் வந்துள்ள காரணத்தால், அரைப்புள்ளி நின்று காற்புள்ளிக்கு உரிய பணியைச் செய்யும்.

ஆங்கு, அது தன்னில், அடியவட்கு ஆக,
பாங்காய் மண் சுமந்தருளிய பரிசும்;
உத்தரகோசமங்கையுள் இருந்து,
வித்தக வேடம் காட்டிய இயல்பும்;
பூவணம்-அதனில் பொலிந்து, இனிது அருளி,
தூ வண மேனி காட்டிய தொன்மையும்;
வாதவூரினில் வந்து, இனிது அருளி,
பாதச் சிலம்பு ஒலி காட்டிய பண்பும்;
(திருவாசகம், 2, 46-53)

திலகமும், அளகமும், சிறு கருஞ் சிலேயும்,
குவளேயும், குமிழும், கொவ்வையும், கொண்ட
மாதர் வாள்-முகத்து, மதைஇய நோக்கமொடு,
காதலின் தோன்றிய கண்கூடு வரியும்;
புயல் சுமந்து வருந்தி, பொழி கதிர் மதியத்து,
கயல் உலாய்த் திரிதரும் காமர் செவ்வியின்,
பாகு பொதி பவளம் திறந்து நிலா உதவிய
நாகு இளமுத்தின் நகை நலம் காட்டி,
'வருக' என வந்து, 'போக' எனப் போகிய
கரு நெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்;
அந்திமாலே வந்ததற்கு இரங்கி,
சிந்தை நோய் கூரும் என் சிறுமை நோக்கி,
கிளி புரை கிளவியும், மட அன நடையும்,
களி மயிற் சாயலும், கரந்தனள் ஆகி,
செரு வேல் நெடுங்கண் சிலதியர் கோலத்து
ஒரு தனி வந்த உள்வரி ஆடலும்;

(சிலப். 8, 74-89)

தூரியக் குரலின், வானின் முகிற் கணம் துணுக்கம்கொள்ள;
வார் சிலே ஒலியின், அஞ்சி, உரும் எலாம், மறுக்கம்கொள்ள;
ஆர்கலி, ஆர்ப்பின், உட்கி அசைவுற; அரக்கர் சேனே,
போர் உவந்து இருந்த வீரர் உறைவிடம் புக்கது அன்றே.

(கம்ப. திரிசிரா. 56)

2. தனித் தனிக் கருத்துக்களே விளக்கி நிற்கும் தொடர்கள் வரும் இடங்கள்:

புத்த ஞாயிறு தோன்றும்காலே:
திங்களும் ஞாயிறும் தீங்கு உறு விளங்க,
தங்கா நாள்மீன் தகைமையின் நடக்கும்;
வானம் பொய்யாது; மா நிலம் வளம்படும்;
ஊனுடை உயிர்கள் உறு துயர் காணு;
வளி வலம்கொட்கும்; மாதிரம் வளம்படும்;
நளி இரு முந்நீர் நலம் பல தரூஉம்;
கறவை கன்று ஆர்த்தி, கலம் நிறை பொழியும்;
பறவை பயன் துய்த்து உறைபதி நீங்கா:
விலங்கும் மக்களும் வெரூஉப் பகை நீங்கும்;
கலங்கு அஞர் நரகரும் பேயும் கைவிடும்;
கூனும் குறளும், ஊமும் செவிடும்,
மாவும் மருளும், மன் உயிர் பெறுஅ;
அந் நாள் பிறந்து அவன் அருளறம் கேட்டோர்
இன்னுப் பிறவி இகந்தோர் ஆதலின்,

போதி மூலம் பொருந்திய சிறப்பின்
நாதன் பாதம் நவை கெட ஏத்துதல்
பிறவிதோறும் மறவேன், மடக்கொடி!

*(மணி. 12, 86-103)*

மண் துயின்றன; நிலைய மலை துயின்றன; மறு இல்
பண் துயின்றன; விரவு பணி துயின்றன; பகரும்
விண் துயின்றன; கழுதும் விழி துயின்றன; பழுது இல்
கண் துயின்றில, நெடிய கடல் துயின்றன களிறு.

*(கம்ப. பம்பைவாவிப். 40)*

3. தனிக் கருத்தை வெளியிடும் தனிச் சொற்கள் வரும் இடம்.

கழலினர்; தாரினர்; கவச மார்பினர்;
நிழலுறு பூணினர்; நெறித்த நெற்றியர்;
அழலுறு குஞ்சியர்;

*(கம்ப. திரிசிரா. 43)*

## முக்காற்புள்ளி

1. அரைப்புள்ளி தொடரும் இடங்களில்—முன்னர் அவ் வாக்கியத் தொடர் வரிசையில் அரைப்புள்ளி இடப்பட்டுள்ள காரணத்தால்—அரைப் புள்ளிக்குப் பதில் முக்காற் புள்ளி இடப்பெறும்.

ஆதி இல்லாப் பரமாணுக்கள்,
தீதுற்று, யாவதும் சிதைவதும் செய்யா;
புதிதாய்ப் பிறந்து, ஒன்று ஒன்றில் புகுதா;
முழு நீர் அணு நில அணுவாய்த் திரியா;
ஒன்று இரண்டாகிப் பிளப்பதும் செய்யா;
அன்றியும், அவல்போல் பரப்பதும் செய்யா;
உலாவும், தாழும், உயர்வதும் செய்யும்;
குலாம் மலை பிறவாக் கூடும்; பலவும்
பின்னையும் பிரிந்து, தம் தன்மைய ஆகும்;
மன்னிய வயிரமாய்ச் செறிந்து, வற்பமும் ஆம்:
வேய் ஆய்த் துளைபடும்; பொருளா முளைக்கும்;
தேயா மதிபோல், செழு நில வரைப்பு ஆம்:
நிறைந்த இவ் அணுக்கள் பூதம்ஆய் நிகழின்,
குறைந்தும் ஒத்தும், கூடா, வரிசையின்;
ஒன்று, முக்கால், அரை, கால் ஆயுறும்;
துன்று மிக்கதனுல் பெயர் சொலப்படுமே;
இக் குணத்து அடைந்தால் அல்லது, நிலன்ஆய்ச்
சிக்கென்பதுவும், நீராய் இழிவதும்,
தீயாய்ச் சுடுவதும், காற்ருய் வீசலும்,
ஆய தொழிலை அடைந்திடமாட்டா:

ஓர் அணுத் தெய்வக் கண்ணோர் உணர்குவர்;
தேரார் பூதத் திரட்சியுள் ஏனோர்;
மாலைப் போதில் ஒரு மயிர் அறியார்,
சாலத் திரள் மயிர் தோற்றுதல் சாலும்:

(மணி. 27, 126-149)

2. தொகுத்துச் சுட்டி, பின் விரித்துக் கூறும் இடம்:

காவுந்தி ஐயை ஓர் கட்டுரை சொல்லும்:
'நலம் புரி கொள்கை நான்மறையாள!
பிலம் புகவேண்டும் பெற்றி ஈங்கு இல்லை;

(சிலப். 11, 151-153)

'ஆர் அவள்?' என்னலோடும், அரக்கியும், 'ஐய! ஆழித்
தேர், அவள் அல்குல்; கொங்கை, செம் பொன் செய் குலிகச்
[செப்பு;
பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்தது அம்மா!
பேர் அவள், சீதை' என்று வடிவு எலாம் பேசலுற்றாள்:

'காமரம் முரலும் பாடல், கள், எனக் கனிந்த இன் சொல்;
தே மலர் நிறைந்த கூந்தல்; ''தேவர்க்கும் அணங்கு ஆம்''
[என்னத்
தாமரை இருந்த தையல், சேடி ஆம் தரமும் அல்லள்;
யாம் உரை வழங்கும் என்பது ஏழைமைப்பாலது அன்றோ?

(கம்ப. இராவணன் அணங்குறு. 68,69)

3. கருத்து மாறும் இடம்:

கடல் புக்கு, உயிர் கொன்று, வாழ்வர் நின் ஐயர்;
உடல் புக்கு, உயிர் கொன்று, வாழ்வைமன் நீயும்:
மிடல் புக்கு அடங்காத வெம் முலையோ பாரம்;
இடர் புக்கு இடுகும் இடை இழவல் கண்டாய்!

(சிலப். 7,17)

இழவு, எனக்கு, உயிர்க்கு எய்தினும் எய்துக,
குழை முகத்து நின் சிந்தனை கோடினால்:
பழக நிற்புறும் பண்பு இவை, காமத்தோடு,
அழகினுக்கு, இனி யார் உளர் ஆவரே?

(கம்ப. காட்சிப். 105)

## முற்றுப்புள்ளி

பாடல்களின் இடையிலும், ஈற்றிலும் கருத்து முற்றும் இடங்களில் முற்றுப்புள்ளி இடப்படும். பாடல்களின் கருத்து ஈற்றில் முடிவுபெருது, வரும் செய்யுளுடன் தொடர்ந்து குளகமாக அமைந்தால், இறுதியில் முற்றுப்புள்ளி இடாமல், காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, சிறுகோடு ஆகியவற்றுள் ஒன்று பொருள் செல் நெறிக்குத் தக்கபடி இடப்பெறும். ஈற்றில் வினுக்குறி, உணர்ச்சிக்குறி, முதலிய வருமாஞல் அப்பொழுதும் முற்றுப்புள்ளி இடப்பெருது.

அகர முதல, எழுத்து எல்லாம்;—ஆதி-
பகவன் முதற்றே, உலகு.

(குறள். 1)

ஏன்று துயர் கெடுக்கும் இன்பம் எய்தி,
மாண்புடை மரபின் மதுரைக்கு ஏகுமின்;
காண்தகு பிலத்தின் காட்சி ஈது.
...... ...... ...... ...... ......

(சிலப். 11, 138-140)

ஊர் இடையிட்ட காடு பல கடந்தால்,
ஆர் இடை உண்டு ஓர் ஆர் அஞர்த் தெய்வம்;
நடுக்கம் சாலா நயத்தின் தோன்றி,
இடுக்கண் செய்யாது இயங்குநர்த் தாங்கும்;
மடுத்துடன் கிடக்கும் மதுரைப் பெருவழி.
...... ...... ...... ...... ......

(சிலப். 11, 143-147)

அனையது ஓர் தன்மை ஆன அருவி நீர் ஆற்றின்பாங்கர்,
பனி தரு தெய்வப் 'பஞ்சவடி' எனும் பருவச் சோலைத்
தனி இடம் அதனை நண்ணி, தம்பியால் சமைக்கப்பட்ட
இனிய பூஞ் சாலை எய்தி இருந்தனன் இராமன். இப்பால்,

(கம்ப. பஞ்சவடிப். 7)

ஓங்கு அரும் பெருந் திறலினும், காலினும், உரத்தின்
வாங்கினுன், மற்று அவ் வாளியை, ஆளி போல் வாலி.
ஆங்கு நோக்கினர், அமரரும் அவுணரும் பிறரும்,
வீங்கினுர்கள் தோள்;—வீரரை யார் வியவாதார்?

(கம்ப. வாலி வதைப். 73)

'''ஆக்க அரிய மூக்கு, உங்கை அரியுண்டாள்'' என்றுரை
நாக்கு அரியும் தயமுகனுர்; நாகரிகர் அல்லாமை,
மூக்கு அரிந்து, நும் குலத்தை முதல் அரிந்தீர்; இனி, உமக்குப்
போக்கு அரிது; அவ் அழகை எல்லாம் புல்லிடையே உகுத்தீரே!
(கம்ப. சூர்ப்பணகைப். 117)

## உணர்ச்சிக்குறி

1 விளியாக நிற்கும் இடம்:

வாயிலோயே! வாயிலோயே!
அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!
(சிலப். 20, 24-26)

2. வியப்பு, உவப்பு, சோகம், இரக்கம், இகழ்ச்சி, முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் இடம்:

கயல் எழுதி, வில் எழுதி, கார் எழுதி, காமன்
செயல் எழுதித் தீர்ந்த முகம் திங்களோ, காணீர்!
திங்களோ, காணீர்—திமில் வாழ்நர் சீறூர்க்கே
அம் கண் ஏர் வானத்து அரவு அஞ்சி வாழ்வதுவே!
(சிலப். 7, 11)

'கோல் வளை மாதே! கோலம் கொள்ளாய்;
காலம் காணுய்; கடிது! இடித்து உரறிக்
காரோ வந்தது! காதலர் ஏறிய
தேரோ வந்தது, செய்வினை முடித்து!' என,
(சிலப். 26, 116-119)

பேசுவது மானம்; இடை பேணுவது காமம்;
கூசுவது மானுடரை; நன்று, நம கொற்றம்!
(கம்ப. இராவணன் மந்திரப். 52)

மண்ணும் நீராய் வந்த புனலை, மகனே! வினையேற்கு
உண்ணும் நீராய் உதவி, உயர் கான் அடைவாய்! என்றுன்.
(கம்ப. நகர் நீங்கு, 55)

ஏழை, சோபனம்! ஏந்திழை, சோபனம்!
வாழி, சோபனம்! மங்கல சோபனம்!
ஆழி ஆன அரக்கனை ஆரியச்
சூழி யானை துகைத்தது, சோபனம்!
(கம்ப. பிராட்டி திருவடி. 3)

3. கருத்து முற்றும் இடத்தில் உணர்ச்சிக் குறியும், உணர்ச்சியை உணர்த்தும் சொல் நின்ற இடத்தில் சிறுகோடு அல்லது காற்புள்ளியும் இடப்பெறும்.

> இறைவனை நல்லாய்! இது நகை ஆகின்றே—
> கறி வளர் தண் சிலம்பன் செய்த நோய் தீர்க்க
> அறியாள் மற்று அன்னை; அலர் கடம்பன் என்றே
> வெறியாடல்தான் விரும்பி, 'வேலன், வருக' என்றாள்!
>
> (சிலப். 24, 11)

> விழுந்திலன் அன்றோ, மற்று அவ் வீடணன்!
>
> (கம்ப. வேல் ஏற்ற. 43)

> திருவின் நல்லார்,
> வந்து உற்று, 'என் கணவன் தன்னைக்
> காட்டு' என்று, மருங்கில் வீழ்ந்தால்,
> அந்து ஒக்க அரற்றவோ, நான்
> கூற்றையும் ஆடல் கொண்டேன்!
>
> (கம்ப. இராவணன் சோகப். 38)

## வினாக்குறி

1. வினாப் பொருள் வரும் இடம்:

> 'காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கு அணி
> நீ விலையிடுதற்கு ஆதியோ?'
>
> (சிலப். 16, 111-112)

2. சில இடங்களில் வினாச் சொல் முன்னும், வினவப்படும் தொடர் அதனைத் தொடர்ந்து பின்னுமாக அமைவதும் உண்டு. இம்மாதிரி வரும் இடங்களில், வினாச் சொல்லை அடுத்து, சிறுகோடு அல்லது காற் புள்ளி இட்டு, வினவப்படும் கருத்து முற்றுமிடத்து வினாக்குறி இடப் பெறும்.

> தளை அவிழ் மலர்க்குழலாய்! தணந்தார் நாட்டு உளதாம் [கொல்—
> வளை நெகிழ எரி சிந்தி, வந்த இம் மருள் மாலை?
>
> (சிலப். 7, 40)

> மறத்தியோ, மறைகளின் வரம்பு கண்ட நீ?
>
> (கம்ப. திருவடி சூட்டு. 68)

> உன்னின் பிறிது ஆயினவோ, உலகம்—
> பொன்னின் பிறிது ஆகில, பொற் கலனே?
>
> (கம்ப. இரணியன் வதைப். 112)

## மேற்கோள் குறி

ஒருவர் பேசும் வார்த்தைகளேயும் எண்ணும் எண்ணங்களேயும் எடுத்துக்காட்டும்பொழுது ஒற்றை மேற்கோள் குறி ' ' இடுதல். ஒருவர் தமது பேச்சில் அயலாரது கூற்றை எடுத்துக் காட்டிஞல் இரட்டை மேற்கோள் குறி " " உபயோகித்தல். அதாவது மேற்கோளுக்குள் மேற்கோள் வந்தால் இரட்டை மேற்கோள் குறி இடப்பெறும். ஒரு மேற்கோள் ஒரே பாடலில் முடிவு பெருது, பல பாடல்களில் தொடர்ந்து அமையுமாயின், ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும் மேற்கோள் குறி இட்டு வந்து, முடிவில் மட்டும் முடிவு குறிக்கும் மேற்கோள் குறியை அமைக்கவேண்டும்.

'இலங்கையின் அளவிற்று அன்ருல், இவ் உரு எடுத்த தோற்றம்;
விலங்கவும் உளது அன்று' என்று, விண்ணவர் வியந்து நோக்க.

(கம்ப. கடல் தாவு. 15)

'மறந்தான் நினேவும் உயிரும், மன்னன்' என்ன மறுகா,
'இறந்தான்கொல்லோ அரசன்?' என்னு, இடர் உற்று அழி [வாள்,

'துறந்தான் மகன் முன் எனேயும்; துறந்தாய் நீயும்; துணேவா!
அறம்தான் இதுவோ? ஐயா! அரசர்க்கு அரசே!' என்ருள்.

(கம்ப. நகர் நீங்கு. 68)

'வேண்டிற்று முடிந்தது அன்றே; வேதியர் தேவன் நின்னேக்
காண்டற்கு விரும்புகின்ருன்; உம்பரும் காண வந்தார்;
"பூண் தக்க கோலம் வல்லே புனேந்தனே, வருத்தம் போக்கி,
ஈண்டக்கொண்டு அணே தி" என்ருன்; எழுந்தருள், இறைவி!' [என்ருன்.

(கம்ப. பிராட்டி திருவடி. 26)

' "வீட்டுண்டு அலறும் குரலால், வேழக் குரல் அன்று எனவே
ஓட்டந்து எதிரா, 'நீ யார்?' என, உற்ற எலாம் உரையா,
வாட்டம் தரும் நெஞ்சினன் ஆய், நின் தாள் வணங்கா, வானேர்
ஈட்டம் எதிர் வந்திடவே, இறந்து ஏகினன் விண்ணிடையே.

' "அறுத்தாய் கணேயால் எனவே அடியேன் தன்னே, ஐயா!
கறுத்தே அருளாய், யானே கண்ணின் கண்டேன் அல்லேன்,
மறுத் தான் இல்லான் வனம் மொண்டிடும் ஓதையின் எய்தது [அலால்,
பொறுத்தே அருள்வாய்!" என்னு, இரு தாள் சென்னி [புனேந்தேன்.

(கம்ப. நகர் நீங்கு. 81-82)

## சிறுகோடு

1. முன் பின் கொண்டு கூட்டுதலுக்குப் பயன்படுதல்:

அளியதாமே, சிறு பசுங் கிளியே—
குழலும், யாழும், அமிழ்தும், குழைத்த நின்
மழலைக் கிளவிக்கு வருந்தினஆகியும்,
மட நடை மாது! நின் மலர்க்கையின் நீங்காது
உடன் உறைவு மரீஇ ஒருவா ஆயின:

(சிலப். 2, 57-61)

'குரவை ஆடுதும் யாம்' என்றாள்—
'கறவை, கன்று துயர் நீங்குக எனவே:'

(சிலப். 17, 5)

கல்லும், நெடு மலையும், பல மரமும், கடைகாணும்
புல்லும், சிறு கொடியும், இடை தெரியாவகை, புரியச்
செல்லும் நெறிதொறும், சென்றன—தெறு கால் புரை [மறவோன்
சில்லின் முதிர் தேரும், சின வய மாருதி தாளும்.

(கம்ப. நிகும்பலை. 106)

2. எழுவாயைப் பிரித்துக் காட்ட.

''இலங்கைவேந்தன்
முறை அல செய்தான்'' என்று, முனிதியோ?—முனிவிலா தாய்!

(கம்ப. வாலி வதைப். 88)

'வீட்டும் காலத்து அலறிய மெய்க் குரல்
கேட்டும், காண்டற்கு இருத்திகொல்?—கிள்ளை! நீ—
நாட்டுங்கால், நெடு நல் அறத்தின் பயன்
ஊட்டும் காலத்து, இகழ்வது உறும்கொலோ?

(கம்ப. காட்சிப். 107)

3. இடைப்பிறவரலாக வருவனவற்றைக் குறித்துக் காட்ட:

மணி திகழ் அவிர் ஒளி மடந்தை! நின் அடி—
தேவர் ஆயினும், பிரமர் ஆயினும்,
நா மாசு கழூஉம் நலம் கிளர் திருந்து அடி—
பிறந்த பிறவிகள் பேணுதல் அல்லது,
மறந்து வாழேன், மடந்தை! என்று ஏத்தி,

(மணி. 25, 149-153)

4. ஒரே செய்யுளில் இடைப்பிறவரலும் முன்பின் கொண்டு கூட்டுதலும் இருப்பின், சிறு கோடுகளின் முன் காற்புள்ளியோ அரைப் புள்ளியோ தேவைப்படலாம்.

அற்று அவர் கூறலும், ஆர் அழலிற்ருய்
முற்றிய கோபம் முருங்க முனிந்தான்,—
'இற்றிதுவோ இவர் சேவகம்?' என்ன,
'பற்றுமின்!' என்றனன்—வெம்மை பயின்ருன்.

(கம்ப. படைத் தலைவர் வதைப். 4)

'இவன்! இவன்! இவன்!' என நின்ருர்; 'இது' என, முதலி [எதிர்ந்தார்;—
பவனனின் முடுகி நடந்தார், பகல் இரவு உற மிடைகின்ருர்—
புவனியும், மலையும், விசும்பும், பொரு அரு நகரும் உடன் [போர்த்
துவனியில் அதிர, விடம்போல் சுடர் விடு படைகள் துரந்தார்.

(கம்ப. கிங்கரர் வதைப். 22)

வண்டு வாழ் குழலாள் முகம் நோக்கி,—ஓர்
தண்டுபோல் புயத்தான் தடுமாறினன்,
'உண்டு கோபம்' என்று உள்ளத்து உணர்ந்து;—அவள்
தொண்டை வாயில் துடிப்பு ஒன்று சொல்லவே.

(கம்ப. பூக்கொய். 38)

' ''இரு கண்களும் இன்றிய தாய் தந்தைக்கும், ஈங்கு, அவர்கள்
பருகும் புனல் கொண்டு அகல்வான் படர்ந்தேன்; பழுது [ஆயினதால்;—
இரு குன்று அனைய புயத்தாய்!—இபம் என்று, உணராது [எய்தாய்;
உருகும் துயரம் தவிர், நீ; ஊழின் செயல் ஈது!'' என்றே,

(கம்ப. நகர் நீங்கு. 77)

5. கதை முதலியவற்றில் திருப்பங்களைக் குறித்துக் காட்ட:

நால் வகைத் தேவரும் மூ-அறு கணங்களும்,
பால் வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறு வேறு கடவுளர் சாறு சிறந்து ஒருபால்—
அறவோர் பள்ளியும், அறன் ஓம்படையும்,
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்,
திறவோர் உரைக்கும் செயல் சிறந்து ஒருபால்—
கொடித் தேர் வேந்தனொடு கூடா மன்னர்
அடித் தளை நீக்க அருள் சிறந்து ஒருபால்—

(சிலப். 5, 176-183)

ஐவகை மன்றத்தும் அரும் பலி உறீஇ—
வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி,
வால் வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்து,
கால்கோள், விழவின், கடைநிலை, சாற்றி—
தங்கிய கொள்கைத் தரு நிலைக் கோட்டத்து,
மங்கல நெடுங் கொடி வானுற எடுத்து—

(சிலப். 5, 140-146)

6. பாடல்களில் பல்லவி போன்ற தொடர்களைப் பிரித்துக் காட்ட:

முழுமதி புரை முகமே, முரி புரு வில் இணையே,
எழுது அரு மின் இடையே—எனை இடர் செய்தவையே.

மரு விரி புரி குழலே, மதி புரை திருமுகமே,
இரு கயல் இணை விழியே,—எனை இடர் செய்தவையே.

(சிலப். 7, 14-15)

—ஆர், இவ்

அதிரேக மாயை அறிவார்?

(கம்ப. நாகபாசப். 251-261)

## இணைகோடு

1. அடிகளில் பதங்கள் ஒடியும் இடங்களில் (வகையுளி):

திருவரங்கா! உன் பழ அடியேற்கு அருள் செய்ய எழுந்-
திரு—வரம் காதலித்தேன் உனக்கே தொண்டு செய்வதற்கே.

(திருவரங். அந். 1)

பனியா மது மேதை படப் படர் மே-
தினி ஆனது, பூவுலகு எங்கணுமே.

(கம்ப. அதிகாயன் வதைப். 73)

வான் அஞ்சுக; வையகம் அஞ்சுக; மா-
லான், அஞ்சு முகத்தவன், அஞ்சுக;

(கம்ப. அதிகாயன் வதைப். 8)

தான் ஒத்தது சொல்லுதி; தா விடை' என்-
றான், இத் திறம் உன்னி அரக்கர்பிரான்.

(கம்ப. அதிகாயன் வதைப். 13)

2. ஒருசொல் நீர்மையவாக வரும் தொடர்கள்:

அரி மணிப் பணத்து அரா-அரசன்

(கம்ப. தாடகை வதைப். 16)

அரா-அணை அமலனுக்கு அளிப்பரால்

(கம்ப. இரணியன் வதைப். 68)

பயம் கெழு குமரர் வட்டு-ஆட்டு ஆடு இடம் பலவும் கண்டார்.

(கம்ப. மிதிலைக் காட்சிப். 19)

3. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் சந்தி பிரிந்து வரும்இடம்:

கனை கழல் அமரர் கோமாற் கட்டவன்-படுத்த காளை

(கம்ப. மீட்சிப். 118)

4. சில கடின சந்திகளில் வரும் அடைமொழிப் பெயர்களைப் பிரிக்குமிடத்து:

கனிந்து உயர் கற்பு எனும் கடவுள்-தீயினால்

(கம்ப. பிராட்டி திருவடி. 76)

மான மாப் புரவிப் பொன்-தார்,

(கம்ப. பிரமாத்திரப். 6)

## பிறை வளைவு

1. சந்தத்திற்காகத் தொக்குவரும் எழுத்துக்களைப் புலப்படுத்த:

பின் நாள், அ(வ்) இராமன் எனும் பெயரான்-
தன் ஆர் உயிர் கொண்டு சமைக்குவெனால்.

(கம்ப. அதிகாயன் வதைப். 14)

மூவாது எ(ந்) நாளும் உலகு ஏழொடு ஏழும்
அரசாளும் மேன்மை முதல்வா!

மேவாத இன்பம் அவை மேவி, மேவ
நெடு வீடு காட்டு அ(ம்) முடியாய்!

(கம்ப. நாகபாசப். 251 )

2. பல அடிகளில் அமைந்த இடைப்பிறவரலைக் காட்ட:

உடல் நிழல் மான உனது அருள் நிற்கும்
என்னையும் கடந்தனள், பொன்னவட்கு இனியோள்;
(கொலை மதில் மூன்றும் இகல் அறக் கடந்து,
பெரு-நிலவு எறித்த புகர் முகத் துளைக் கை
பொழி மதக் கறையடி அழிதரக் கடந்து,
களவில் தொழில்செய் அரிமகன் உடலம்
திருநுதல் நோக்கத்து எரிபெறக் கடந்து,
மாறுகொண்டு அறையும் மதிநூற் கடல் கிளர்
சமயக் கணக்கர் தம் திறம் கடந்து,
புலனொடு தியங்கும் பொய்உளம் கடந்த—
மலருடன் நிறைந்து வான்வழி கடந்த
பொழில் நிறை கூடல் புது மதிச் சடையோன்
மன் நிலை கடவா மனத்தவர் போல)
ஒன்னலர் இடும் திறைச் செலினும்,
தன் நிலை கடவாது, அவன் பரித் தேரே.

(கல்லாடம், 65, 18-32)

## பகர வளைவு

சில குறிப்புக்களையோ ஐயப் பகுதிகளையோ பிரித்துக் காட்ட:

[இது முதற்கொண்டு விடைகொடுத்த படலம் என்று சில பிரதிகளில் காண்கிறது.]

[வட்டம் இட்டு, மிளிர் நெற்றியின் வயங்கு வயிரக்
கட்டு அமைந்த கதிர் வாளி, எதிரே கடவலால்,
விட்ட விட்ட மலை மீள, அவன் மெய்யில், விசையால்,
பட்ட பட்ட இடம் எங்கும், உடன் ஊறுபடலும்,]

(கம்ப. விராதன். 29)

# பல பதிப்பாசிரியர்களின் கருத்துக்கள்

## 1

சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்ப்புலவர்
திரு வேங்கடாசல முதலியார்
*[கம்பராமாயணம், அயோத்தியாகாண்டப் பகுதியில் வெளியிட்ட 'விளம்பரம்' 1843]*

இதினாலே சகலருக்கும் தெரியப்படுத்துகிறது என்ன என்றால்—

இந்த ஸ்ரீமத் கம்பராமாயணம் அயோத்தியாகாண்டத்தில்— 60-ஆம் பக்கம் தொடங்கி, பின்தொடர்ந்து வருகிற அந்தந்த திருவிருத்தத்திலும், அடிதோறும் உள்ள சொற்கள் எல்லாத்தை யுமே, எழுத்துச் சந்தி பண்ணாமலும் விகாரப்படுத்தாமலும், அடி தொடை நோக்கியும், வேண்டும் இடம் அறிந்தும், சிலதுகளை மாத்திரம் எழுத்துச்சந்திபண்ணியும் விகாரப்படுத்தியும், மற்றது களை எல்லாம் சந்திபிரித்தும், அச்சிற்பதிப்பித்து இருக்கிறோம். அப்படி எதுக்காக செய்யப்பட்டது என்றால், இதற்குமுன்னமே லோகோபகாரம் ஆக, எம்மால் அச்சிற்பதிப்பிக்கப் பட்டிருக்கின்ற சில சுவடிகளைப் பார்வை இட்டவர்களில், இந்த பிராந்தியத்துப் பிரபுக்களும், வித்துவான்களும், புலவர்களும், கவிராயன்மார்களும் உபாத்தியாயர்களும் ஆயிருக்கிற சில பெயர்கள், அந்த சுவடிகளில் பயன் இல்லாத சந்தியையும் விகாரத்தையும் விலக்கி, பயன் உள்ள சந்தியையும் விகாரத்தையும் வைத்துக்கொண்டு, அதுகள் அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கையினாலே, இத்தமிழ் ஆனது லோகத்துக்கு உபகாரம் ஆகவேணும் என்று நமது முன்னோர்கள் நினைத்தபடிக்கு நாங்கள் பிரயோசனம் கண்டோம்; ஆகையால் அப்படியே இதிலும் செய்யப்படவேணும் என்று எம்மைக் கேட்டுக்கொண்டார்கள்; இதுவும் அல்லாமல் தமிழ் இலக்கணம் படித்தும், பல சொற் களுக்கும் உறுப்புகளுக்கும் சொன்ன பொது விதிகளையும், சில சொற்களுக்கும் உறுப்புகளுக்கும் சொன்ன சிறப்புவிதிகளையும் கொண்டு, இன்ன இடத்திலே சந்தியாவது விகாரமாவது வேண்டும், இன்ன இடத்திலே அது வேண்டாம், என்று ஓர்ந்து உணர்ந்து, பயன் உள்ள சந்தியையும் விகாரத்தையுமே அனுசரித்து, நமது முன்னோர்கள் கருதியபடிக்கு லோகோபகாரத்தை நிலை நிறுத்தாமல் பயன் இல்லாத சந்தியையும் விகாரத்தையுமே எங்கெங்கும் அனுசரிக்கப் புறப்பட்டு, அந்த லோகோபகாரத்தை நிலைகெடுக்கிற இளங்கல்விமான்கள் பலபெயர்கள் இருக்கிறார்கள், அவர்களை

சந்திப்பேய் அறையாமலும் விகார வெறி பிடியாமலும், அவர் களுக்குத் தெளிவு உண்டாகி, கலக்கம் தீரும்படியாய், இந்த சந்தி யையும் விகாரத்தையும் குறித்து, சந்தி விளக்கம் என்று ஒரு நூல் செய்யவேணும் என்றும் கூடக் கேட்டுக்கொண்டார்கள்.

அவர்களாலே கேட்டுக்கொள்ளப்பட்ட இந்த இரண்டும், லோகோபகாரமா இருக்கையால், யாமும் அதுகளுக்கு உடன் பட்டோம். அதற்காக, கற்றவர்களுக்கே செம்பாதி பொருள் விளங்காது என்று லோக வதந்தி ஆயிருக்கிற, இந்த ஸ்ரீமத் கம்ப ராமாயணத்திலே, மேற்படி சந்தியையும் விகாரத்தையும் தகுந்த படி பிரிவினே செய்தால், அது முழுதும் பொருள் விளங்கும் என்று எண்ணி, முதலிலே அயோத்தியாகாண்டத்தில் அறுபதாம் பக்கம் தொடங்கி, தேர்ந்த ஒரு நல்ல கல்விமான் ஆனவர், ஒருவரிடத்தில் தாம் கற்றபோதும், தாமே கற்கிறபோதும், தாம் ஒருவனுக்கு கற்பிக்கும்போதும், தமக்கும் கேட்போர்க்கும் பொருள் விளங்கி, இவர் கற்றவர்தாம் என்று கேட்டோர் தம்மை மதிக்கும் படியாய், எப்படி சந்தியையும் விகாரத்தையும் விலக்கி, பதங்களேப் பிரித்து படிப்பாரோ, அப்படியே பிரித்து அச்சிற்பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. இதினுலே ஆரணியகாண்டம் பாதிவரைக்கும் போயும், இதுவரைக்கும் யாதொரு திருவிருத்தமும் எமக்கு அர்த்தம் ஆகாதது இல்லே; இப்படி செய்யாததற்கு முன்னே, எமக்கு இதில் இருந்த மயக்கமும் இப்படி செய்த பின்பு அல்லவோ தீர்ந்தது உங்களுக்கும் இப்படியே அனுபவம் ஆகல் ஆம். ஊன்றிப்பார்த் தால் இந்த விளம்பரத்திலுலே கூட அந்த அனுபவம் காணல் ஆம், எப்படி என்றுல், இதிலே இருக்கிற சொற்களே, வேண்டும் இடங் களிலே சந்தி விகாரங்களே வைத்துக்கொண்டு, வேண்டா இடங்க ளிலே அதுகளே விலக்கி, எழுதியபடியால், இதை வாசிக்கிறதற்கும், வாசித்தபின் பொருள் அறிகிறதற்கும், அதி சுலபம் ஆயிருக்கிறதால், இதைக் கண்டு அறியுங்களேன்.

இனி சந்தியாவது விகாரமாவது, பயன் நோக்கி இன்ன இடத்தி லே வேண்டும், பயன் இல்லாமையால் இன்ன இடத்திலே வேண் டாம், என்று ஓர்ந்து உணராமல், சந்தியையும் விகாரத்தையும் எங்கெங்கும் கொண்டு, நமது முன்னேர்கள் கருதிய லோகோப காரத்தை கெடுக்கும் சந்தி விகார அபிமானிகள் ஆகிய இளங் கல்விமான்களுக்கு, இச்சந்திவிகாரங்களின் விவரங்களேயும், இது களால் வரும் பயன்களேயும், இலக்கணங்களாலேயும் இலக்கியங் களாலேயும் இதுகள் பயன் உள்ள சந்தியும் விகாரமும் இதுகள் பயன் இல்லாத சந்தியும் விகாரமும் என்று எடுத்துக்காட்டுதற் காக, மேலே சொல்லிய புத்திமான்கள் கேட்டுக் கொண்டபடி சந்தி விளக்கம் என்று ஒரு நூலும் செய்யப்படும். அதிலே இந்த

சந்தியையும் விகாரத்தையும் பிரிவினை செய்தற்கு வயனங்களும், அதினுலேவரும் பயன்களும், அப்படி பிரிவினை செய்யாவிட்டால் வரும் நஷ்டங்களும், பிரிவினை செய்து காட்டச்சொல்லி கேட்டுக் கொண்டவர்கள் பெயர்களும், விளங்கும்.

**2**

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

[சுவர்க்க நீக்கம் மொழிபெயர்ப்பு, முகவுரை. (1895)]

தமிழறிந்தோர் ஆங்கிலேய பாஷையில் பழகுமுன் எழுதப்பட்ட நமது வசனநூல்களில், ஒரு வசனத்தின் முடிவையும் அடுத்த வசனத்தின் துவக்கத்தையும் காட்ட வசனங்களுக்கிடையே முடிப்பிசைக்குறி (Full Stop) யிட்டும் இடம்விட்டும் எழுதலாவது, ஒரு வசனத்தினுள்ளேயே வாசிப்போன் நிறுத்தி வாசிக்க வேண்டிய இடங்களில் உறுப்பிசைக்குறி (Comma) முதலிய குறியிட்டு இடம் விடுதலாவது இல்லை. அந்தக் குறை இப்போது இங்கிலிஷ் பாஷையின் வழக்கத்தை அநுசரித்து வேண்டுமிடத்து இடம்விடுதலாலும் பல குறியிட்டினுலும் நிரப்பப்பட்டுவிட்டது. அவ்வாறு செய்யுள் எழுதும் முறை சீர்திருத்தப்படவில்லை. இப்போது அச்சிடப்பட்டுள்ள சில நூல்களில் செய்யுட்கள் சீர் பிரித்துப் பதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சந்தியும் பிரித்துப் பதிக்கப்பெற்ற நூல்கள் மிகச் சில. செய்யுளைச் சந்தி பிரித்துப் பதிக்கக்கூடாதென்பது அனேகர் கொள்கை. சந்தி பிரிக்காத செய்யுட்களில் குறியீடு பெரும்பாலும் கூடாததே. சந்தி பிரித்துக் குறியீட்டோடு எழுதப்பட்ட செய்யுள், வாசிப்போர்க்கு, அவ்வாறெழுதப்படாத அதே செய்யுளினும், எளிதாகப் புலப்படுமென்பதிற் சந்தேகமில்லை. செய்யுளைச் சந்திபிரித்தெழுதும்போது, ''மடங்கொன் றறிவ கற்றுங் கல்வி'' என்பதை ''மடங்கொன்று அறிவு அகற்றும் கல்வி'' என்று எழுதினுல் வெண்பா இலக்கணம் சிதைதல்போல, யாப்புக் கெடாமலும் சிலேடை யமகம் திரிபு மடக்கு முதலியவை பழுதாகாமலும் பிரித்தல்வேண்டும். சந்தி பிரியாதிருப்பினும் வாசிப்போர் இலகுவா யறிந்துகொள்ளக்கூடிய பாகங்களைச் சந்தி பிரித்தெழுதல் ஆவசியகமன்று. சந்தி பிரித்துக் காட்டல் நலமாயும் அதனுல் யாப்புக்கேடு வருவதாயும் இருந்தால், சந்திபிரித்துப் பொருள் கொள்ளவேண்டுமென்பதற்கடையாளமாகப் பிரிக்க வேண்டிய எழுத்துக்கு ஒரு குறியிடுதல் உசிதமாயிருக்கின்றது. 'வந்து அகாலத்துக் கண்டான்' எனற்பாலது இவ்வாறு சந்தி

பிரித்தெழுதினுல் யாப்புக் கெடும்படியாகச் செய்யுளில் வருமாயின் யாப்புக்கேடுருமல் 'வந்தகாலத்துக் கண்டான்' என்றெழுதலாம்.

அவ்வாறே , ; : . இவை முதலிய குறியிடுதல் வேண்டியதாயிருந்தும் அக்குறியீடு யாப்புக்கெடாமல் அமையாததாயின், எவ்வெழுத்தைப் பிரித்து இடையே எக்குறி இடவேண்டுமோ, அவ்வெழுத்தைப் பிரியாமல் அதன்கீழ் அக்குறி இடுதலும் தகுதியாயிருக்கின்றது. "அட்டாலும் பால்சுவையிற் குன்ருது, அளவளாய்" என்று பிரித்தெழுதில் யாப்புக் கெடுமாகலின், அவ்வாறெழுதாது "அட்டாலும் பால்சுவையிற் குன்ரு தளவளாய்" என்று யாப்புக் கேடின்றிக் குறியிடலாம். சந்தி பிரித்தல் சீர்பிரித்தல் குறியீடு ஆகிய இவைகளைப்பற்றி இப்போது கூறிய கருத்துக்களை ஞாபகத்தில் வைத்து இப்புத்தகத்தில் செய்யுட்கள் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. செய்யுட்களில், மேற்கூறியவாறு, சந்தி பிரித்தல் சீர் பிரித்தல் குறியீடு ஆகிய மூவகைச் சீர்திருத்தமும் ஒருங்கே பிரயோகித்து இந்நூல்தான் முதற்கட் பதிப்பிக்கப்பட்ட தென்பதில்லை. இதற்கு முன்னமே (சொற்ப பேதத்துடன்) இவ்வாறு பதிக்கப்பட்ட நூலுண்டு.

இங்கிலிஷ் செய்யுட்களில் யாப்பிலக்கணப்படி அடிகளைச் சீர் பிரிப்பதில் பதங்கள் அர்த்தமாகாதபடி சிதைதலும் அவ்வடிகளை அர்த்தமாகும்படி பிரிப்பதில் யாப்பிலக்கணங் கெடுதலும் உண்டு. அவ்வாறன்றித் தமிழ்ச் செய்யுட்கள் விஷயத்தில் பொருளறியும்படி சந்தி பிரித்தலும், யாப்பிலக்கணத்துக் கிணங்கச் சீர்பிரித்தலும் ஒன்ருேடொன்று மாறுகொள்ளாது பெரும்பான்மை ஒத்திருக்கின்றன. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி—பகவன் முதற்றே உலகு" என்பதில் சீர் பிரித்தலும் பொருளுக்காகப் பதம் பிரித்தலும் வேறுபடாமை விளங்குகின்றது. இவ்வாறன்றி, இங்கிலிஷ் செய்யுட்கள் அர்த்தமாகும்படி பதம் பிரித்தல் ஒரு வகையாகவும் சீர் பிரித்தல் வேறு வகையாகவும் இருப்பது, இவ்வேறுபாட்டை விளக்கும்படி இங்கிலிஷ் செய்யுட்களைப்போலப் பதம்புணர்த்தி யான் செய்த 'திரிபுரமெரித்த வுருத்திரனே—பொருகாமதகனனென்போன்' என்ற குறள் வெண்பாவினுல் விளங்கும். இப்பாவைச் சீர்பிரித்துக் காட்டவேண்டில், 'திரிபு ரமெரித் தவுருத் திரனே-பொருகா மதகனனென் போன்' என்றும், பொருள் புலப்படக் காட்டல்வேண்டில் 'திரிபுரம் எரித்த உருத்திரனே பொருகாமதகனன் என்போன்' என்றும் பிரித்தெழுத வேண்டும்.

## 3

### எஸ். வையாபுரிப் பிள்ளை

*[நான்மணிக் கடிகை, முன்னுரை (1944)]*

இந் நூலினைப் பதிப்பிடுதலில் ஒரு சில நியமங்களைக் கையாண்டுள்ளேன். இவற்றைக் குறித்துச் சில ஆண்டுகளாக நான் கருத்தூன்றி ஆலோசனை செய்ததுண்டு. புது நியமங்களுக்கு அவசியம் உண்டா? என்ற ஐயப்பாடும் இடையிடையே தோன்றியது. ஆங்கிலத்தில் 'சாஸர்' இயற்றிய கவிகளைத் தற்காலத்துள்ளார் பொருளுணர்ந்துகொள்வதற்கு அருமையாயிருத்தல்பற்றி, சொல்லின் எழுத்தமைதியை (spelling) மாற்றி அச்சியற்றல் தகுமா? இது போன்றதுதானே செய்யுளில் சொற்களைப் பிரித்து அச்சிடுதல்? இங்ஙனம் பிரிப்பதால் செய்யுளின் ஓசை கெட்டுவிடுமல்லவா? இவை போன்ற கேள்விகளுக்கு முற்றும் திருப்திகரமான விடையளிப்பது எளிதல்ல. ஆனால், பொருள் எளிதில் விளங்கும்படி அச்சியற்றவேண்டும் என்ற நோக்கமும் கைக்கொள்ள வேண்டுவதாயுள்ளதே. இரு வகை மனப்பாங்கிற்கும் ஒரு சமரசம் ஏற்படவேண்டியது அவசியம். இந் நெறியில் நான் சிறிது முயற்சி செய்திருக்கிறேன். அனுபவம் பெருகப் பெருக இந் நியமங்கள் திருந்தியமையலாம். செய்யுள் பயிலுவோரின் தொகை அதிகரித்துவரும் இந் நாளில் இந் நியமங்கள் தக்கபடி ஆராயப்பட்டு அனைவர்க்கும் உடம்பாடான சில நியமங்கள் ஏற்படக்கூடும். அக்காலம் விரைவில் வரின் நலமாகும்.

பொதுவாக நான் செய்துள்ள ஒரு சில வேறுபாடுகளைக் குறித்து மட்டுந்தான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

1. செய்யுட்களில் காமா, செமிக்கோலன் முதலிய குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் வாசிப்பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கும்.

2. நேரிசை வெண்பாக்களில் தனிச் சொல்லை இரண்டாவது அடியில் சிறியதொரு கோடு அமைத்துத் தனிப்படக் காட்டுவது இப்போது வழக்கமாயுள்ளது. இவ் வழக்கம் சமீப காலத்திலே தான் ஏற்பட்டது. முற் காலத்து ஏட்டுப் பிரதிகளில் இது கிடையாது. முதல் முதலில் அச்சிடும் முயற்சியில் இறங்கியவர்களில் சிலர் சிறிது வெற்றிடம் விட்டும், சிலர் இடம்விடாது தொடர்ந்தும் தனிச் சொல்லைப் பதிப்பித்தனர். வேறு சிலர் தனிச் சொற்களுக்குமுன் கலிவெண்பாவில் உடுக்குறியிட்டுப் பதிப்பித்தனர். உதாரணமாக 1831-ல் தாண்டவராய முதலியாரால் 'பழுதற

ஆராயப்பட்டு' வெளிவந்த 'திருக்குறண்மூலமும் நாலடி நானூற்றின் மூலமும்' என்ற பதிப்பைக் காண்க. 1868-ல் வெளியிட்ட வடமலை வெண்பாவும் இங்ஙனமே பதிப்பிக்கப்பட்டுள்ளது. மிகப் பிற்பட்ட காலத்தில்தான் (சுமார் 1875) கோடிட்டுக் காட்டும் வழக்கம் ஏற்பட்டது. தனிச்சொல்லை விதித்துள்ள இலக்கண நூல்களில் அதனை இவ்வாறு காட்டவேண்டும் என்ற குறிப்புக் கொடுக்கப்படவில்லை. கலிப்பா முதலியவற்றுள் தனிச் சொல் வரும்போது அதனைக் கோடிட்டுக் காட்டும் வழக்கம் இன்றும் கிடையாது. நேரிசைவெண்பாவிலும் கலிவெண்பாவிலும் மட்டுந்தான் இதனை இப்போது கையாண்டுவருகிறார்கள். நேரிசை வெண்பாவில் சில இடங்களில் கோடிடுவது பொருளை எளிதில் உணர்வதற்காக இடும் காமா முதலிய குறியீடுகளுக்குத் தடையாயிருக்கிறது. ஆகவே, இப் பதிப்பில் தனிச் சொல்லுக்கு அடையாளமாக இடும் கோடு நீக்கப்பட்டுள்ளது.

3. சொற்கள் அசையுறுப்புக் கெடாதவண்ணமும் எதுகை, மோனை, சீர் இவற்றின் நயங்கள் கெடாதவண்ணமும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

4. கீழ்வருவனவற்றைப் பிரிக்கவில்லை:—

மரபுவழிப்பட்ட அடைமொழிகள் (உ-ம்) கொடுங்குழை, வாண்முகம்.

சிறுமை, பெருமை, நல், தீ முதலிய அடைமொழிகள்
(உ-ம்) பெருங்கடல், பெருஞ்சிறப்பு.

ஒரு சொல் நீர்மைத்தாக அமைந்த சொற்கள்
(உ-ம்) வேளாண்மை, மேற்பட, இன்புறூஉம்.

எல்லாம் என்பது சேர்ந்து வரும் பெயர்கள்
(உ-ம்) மரமெல்லாம்.

ஆ, ஆக, ஆகிய முதலிய சேர்ந்து வரும் பெயர்ச்சொற்கள்
(உ-ம்) வித்தாக.

வேற்றுமையுருபுகள், சாரியை, சொல்லுருபுகள், சேர்ந்து வரும் பெயர்கள்
(உ-ம்) படியை, மடியகத்து.

உருபுகள் தொக்குவரும் பெயர்கள்
(உ-ம்) அறஞ்சேர்ந்த, காதற்புதல்வர், எள்ளற்பொருளது

பண்பு குறிக்கும் குறிப்புச் சொற்கள்
(உ-ம்) மெல்லென்றல்.

கொள் முதலிய துணைவினைகள் சேர்ந்து வரும் வினைகள்
(உ-ம்) பூசிக்கொளினும், தவிர்க்குமாம்.

செய்யும் என்னும் வாய்பாட்டுப்பெயரெச்சம்.

எச்சத்தின்மேல் வரும் அன்ன, அனைய முதலியன
(உ-ம்) கற்றன்னர்.

எச்சவாய்பாடுகள்
(உ-ம்) சிறிதாயின்.

மேலே குறிக்கப்பட்டனவொழியப் பிற இடங்கள் பெரும்பாலும் பிரிக்கப்பட்டிருக்கும். இப்பதிப்பிலே, வேறு இரண்டு நியமங்கள் முக்கியமாகக் கவனிக்கத்தக்கன. குற்றுகர முற்றுகரங்களும் இன்மைப் பொருளில் வரும் இல்லும் எல்லா இடங்களிலும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

**4**

எஸ். வையாபுரிப் பிள்ளை

*[திவ்யப் பிரபந்தம், முதலாயிரம், பதிப்புரை, 1955.]*

இவ் இலக்கியச் செல்வத்தைத் தமிழ் மக்கள் அனைவரும் பாடிக் கவிதைச் சுவையில் ஈடுபடவேண்டுமானுல், இன்னும் நூதன முறைகளை அனுசரித்து, ஒரு புதிய பதிப்பு வெளிவருதல் வேண்டு மென்று தோன்றியது. இக்கருத்தின் விளைவே இப் பதிப்பாகும்.

இதற்குமுன் அச்சியற்றி வந்துள்ள முறைகளை இங்கே கவனித்தல் அவசியமாகும். ஒரு காலத்தில் அடி வரையறை தெரியக்கூடாத வண்ணமே செய்யுட்களை ஏட்டில் எழுதி வந்தனர். பிற்பாடு அடி வரையறை காட்டப்பட்டது. அச்சில் அடி வரையறையைக் காமா, உடுக்குறி முதலிய குறியீடுகளால் காட்டி வந்தனர். இவ் வளவில்தான் திவ்யப் பிரபந்தப் பதிப்புக்கள் வெகு காலம் அச்சி

யற்றப்பெற்றுவந்தன. செய்யுட்களை வாசிப்பதில் இம்முறை பெரிதும் பயன்படாமையினுலே, பின்னர், சீர்பிரித்து அச்சிடத் தொடங்கினர். 1934-ல் ஸ்ரீ வி. கே. ராமானுஜதாஸன் அவர்கள் முதன் முதலில் திருவாய்மொழியைச் சீர்பிரித்து வெளியிட்டனர். 1952-ல் வெளிவந்த ஸ்ரீ பி. இரத்தின நாயகர் ஸன்ஸ் அவர்கள் பதிப்பில் நாலாயிரம் முழுவதும் இங்ஙனமே சீர்பிரிக்கப்பட்டுள்ளது. இம் முறையில் பெரும் பயன் உண்டாயிற்று. செய்யுட்களின் இயல்பு நன்கு புலனுயிற்று. அன்றியும் பிரிப்பதில் செய்யுள் இலக்கணத்தை முக்கியமாகக் கவனித்து வந்தமையினுலே அச்செய்யுட்களில் பிழையிருக்குமாயின் அவை எளிதில் புலப்படுதற்கும் இடம் ஏற்பட்டது. . . . . .

மேலும், சீர்களைப் பிரித்தல் இசை யின்பத்தை உணர்தற்கும் பயன்பட்டது. ஏனெனில் இவ்வின்பம் சீர்களையே முக்கிய நிலைக்களமாகக் கொண்டது. அதனேடு ஆழ்வார்கள் பாடிய காலத்து வழங்கிய இசை பற்றியும் அவ் இன்பம் சிறந்து விளங்கும். ஆழ்வார்களோடு ஏறத் தாழச் சமகாலத்தினராகிய நாயன்மார்களின் திருப்பாடல்கள் இவ் இசை யின்பத்தை உணர்வதற்கும், செய்யுளின்பத்தை உணர்வதற்கும் மிகவும் பயன்படுவனவாகும். சிறிது காலத்திற்கு முன்பிருந்த அறிஞர்களும் இதை யுணர்ந்து இசை பற்றிய குறிப்புக்கள் தந்துள்ளார்கள். உதாரணமாக, 'பிறந்த வாறும்' என்ற பாசுரத்தின் முகப்பில் 'பண்-காந்தாரம்' என்பதனேடு, 'தாளம்-ஏழொத்து, மோகன ராகம், ஆதி தாளம்' என்ற குறிப்பும் உள்ளது. இதனை 1865-ல் வெளிவந்த ஸ்ரீ அப்பாவு முதலியார் பதிப்பில் காணலாம். ஆனுல், இவைகளெல்லாம் சேவிப்பவர்களுக்கும் சந்தை சொல்பவர்களுக்கும் பொது மக்களுக்கும் விளக்கமற்ற குறிப்புக்களே யாகும். கற்போர்களெல்லாரும் சங்கீத வித்வான்களாக இருக்க முடியுமா?

சீர் பற்றிப் பிரிப்பதும் இசை பற்றிப் பிரிப்பதும் பொருளுணர்ச்சிக்கு உதவுவன அல்ல. தமிழறிவு மிக்கார்க்கும் இசை-அறிவு உடையார்க்கும் அன்றி ஏனையோர்க்கு இவை பயன்படமாட்டா.

பொருளுணர்ச்சிக்குச் சீர் பிரிப்பதைக் காட்டிலும், சந்தி பிரிப்பது அவசியம். தமிழ் இலக்கணத்தைக் கற்பவர்கள் இக்காலத்தில் அரியர். சந்தி சேர்ந்துள்ள தொடர்களை இவர்கள் பிரிக்க முடியாமல் தடுமாறுகிறுர்கள். இம் முயற்சியும் பலராலும் ஒரு நியம மின்றிப் பலபடியாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. எனவே, இது வேண்டும் பயனை அளிக்கவில்லை. இருபாலார்க்கும் எளிதில்

பொருள் உணரக் கூடியபடி செய்யுளை அமைத்தால்தான் தற்காலத்தவர்க்குப் பயன்படுவதாகும். இந்நோக்கம் செய்யுளில் வரும் பதங்களில் பெரும்பாலனவற்றைப் பிரித்தால் அன்றி முற்றுப்பெருது. இந்நெறியே ஏனையவற்றைக் காட்டிலும் சிறந்தது. அடி பிரித்தல், சீர்பிரித்தல், சீருள்ளே சந்தி பிரித்தல், பதங்களைப் பிரித்தல் என வரும் பரிணமக் கிரமப்படியும் இது உண்மையாதல் காணலாம். எனினும், இசையும் ஒரோ இடங்களில் கவனிக்கும்படியாயிற்று. உதாரணமாக, 'அமலனுதிபிரான்' என்ற பாசுரத்தில் இதன் அவசியத்தைக் கண்டுகொள்ளலாம். இங்ஙனமே சீர்களையும் ஒருவாறு தழுவிப் பதங்களைப் பிரித்திருக்கிறது. பொருளுணர்ச்சிக்கு வேண்டும் காமா முதலிய பலவகை நிறுத்தல்-குறியீடுகளும் இடப்பட்டுள்ளன.

இனி, பதங்களைப் பிரித்தல் முதலியன பற்றி இப்பதிப்பில் கையாண்ட நெறிகளில் மிக முக்கியமானவற்றைக் கவனித்தல் வேண்டும். பதங்களைப் பிரிப்பதில் சந்தி முக்கியமான அம்சம். அவற்றுள் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 'இல்' என்பது பல பொருளில் வரும். வீடு, இன்மை, உருபு என்பனவாக வருதலை முக்கியமாகக் கூறலாம். உருபாக வருவதன்பின் வல்லினம் வருமாயின் அது, சந்தி பெற்றே வரும். 'திண்ணக் கலத்திற்றிரை' என்பது திவ்யப் பிரபந்தம் (163). 'புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவது எவன்' என்பது குறள் (46). இன்மைப் பொருளில் வருமிடத்துச் சந்தி சேர்த்தல் இல்லை. 'வழுவில் கொடையான்' (திவ்யப்.47), 'ஏதமில் தண்ணுமை' (திவ்ய. 924), 'கோளில் பொறியில்' (குறள் 9) என்பவற்றைக் காண்க. உறழ்ந்து வருதலுங்கூட இவற்றில் கிடையாது; இயல்பாகவே நிற்கும். இவ் ஈரிடத்தும் வரும் பிரயோகத்தை வேறு பிரித்தறிதல் அவசியமாகும். அன்றியும் உருபேற்ற நிலையில் திரிந்துவரும் எழுத்துக்கள் கடின சந்திகளின் பயனும். இவற்றை நீக்குதலும் வேண்டும். இவ்வகைக் கடின சந்திகளில் வருமொழியின் வடிவமும் விளங்கமாட்டாது. உதாரணமாக, 'திண்ணக் கலத்திற் றிரை' என்பதில் 'றிரை' என்பதன் உண்மை வடிவம் புலப்படுதல் அரிது. ஆகவே, வருஞ் சொல்லின் ரூபம் தெளிவுபட இருத்தல் நல்லது. சந்தியையும் ஒருவாறு காட்டினல்தான் பொருளும் தெளிவுபடும். இதனல் 'கலத்திற் திரை' என்று கொடுப்பதே தகுதி எனக் கொள்ளத் தக்கது. இன்னும் பையிற்றுயின்ற என்ற திருப்பாவைப் பாசுரப் பகுதியில் 'துயின்ற' என்பதனைத் தெளிவுபடுத்திச் சந்தியையும் ஒருவாறு சுட்டி 'பையிற் துயின்ற' என்று அமைக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருதியே சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் தமது

பதிப்புக்களில் இம்முறையைக் கையாண்டனர். இது போன்ற கடின சந்திகளிலன்றிப் பிறஇடங்களில் எல்லாம் சந்திகள் தெளிவாகவே பிரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

குற்றுகர முற்றுகரச் சந்திகளைப் பிரித்து, உகரங்களை நகவளைவுக் குறிகளுக்குள் அமைத்துத் தற்காலத்தார் பலர் பாடல்களை அச்சிட்டு வருகின்றனர். இதனல் குற்றுகரம் முற்றுகரம் என்ற இலக்கணம் தெரியலாம். மற்றும் வருமொழி இன்னதெனத் தெரிதற்கு இடமுண்டு. செய்யுளோசையை உணர்தற்கும் இது பயன்படுவதாகலாம். ஆனல், செய்யுளோசையில் நோக்கமின்றிப் பதங்களைப் பிரித்து அச்சிடும் தற்கால நெறியில் இவை சிறிதும் பயன்படமாட்டா. எனவே, உகரங்களைத் தனிப்படக் காட்டும் நெறி கையாளப்படவில்லை.